உ

செந்தமிழ் — ~~1925~~ 1924-25 ~~1925 செப்~~

[illegible] -15 — [illegible] . 12


X
[illegible]
[illegible] 5 · 15 · 12
180753

Regd. No. M. 916.

6 OCT 1925 MADRAS

# THE VEDANTA DIPIKA

# வேதாந்த தீபிகை.

க்ரோதனஹ,
1924—1925.
ஸம்புடம் 15.

புரட்டாசிமீ.
SEPTEMBER.
ஸஞ்சிகை 12.



பத்ராதிபர். }
கார்யதர்சி. } ஈ. ஸ்ரீநிவாஸராகவ அய்யங்கார், எம்.ஏ.

விஷய ஸூசிகை.


1. பத்ராதிபரின் குறிப்புகள்;—ஸ்வப்னம். 283
2. யுதும்பதர்னர்:—ஸ்ரீ. உப. த. வி. ஸ்ரீநிவாஸாசார்யர். 289
3. கடிதங்கள்.—(1) மஹாமஹோபாத்யாய பண்டிதரத்னம் லக்ஷ்மீபுரம்
ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸாசார்யர். 294
4. ,, (2) ஸ்ரீ. உப. வே. இ. ரங்கநாதாசார்யர். 296
5. ,, (3) ஸ்ரீ. உப. ஸ்ரீசைல தாதாசார்யர். 30[illegible]
6. ஸமாதானம்.:—ஸ்ரீ. உப. வே. சே. நரஸிம்ஹமாசார்யர். 29[illegible]
7. ஸந்தேஹத்தின் மேல் ஸந்தேஹம்.
ஸ்ரீ. உப. வே. ஸ்ரீசைல தாதாசார்யர். 3?2
8. ஸந்தேஹத்வய நிவ்ருத்தி.
ஸ்ரீ. உப. வே. பண்டிதபூஷணம், செட்டலூர் நரஸிம்ஹமாசார்யர். 303
9. ஸ்ரீபரமபத ஸோபாநம் (வ்யாக்யானத்துடன்):—
ஸ்ரீ. உப. வே. பண்டிதபூஷணம் சே. நரஸிம்ஹமாசார்யர். 49
10. ஸ்ரீ ஸச்சரித்ர ரக்ஷை (தமிழ்மொழி பெயர்ப்புடன்)—
ஸ்ரீ. உப. வே. பண்டிதபூஷணம் சே. நரஸிம்ஹமாசார்யர். 153


Office:—2/11, Adiappa Mudaly Street, Purasawalkam.
K. R. Press, Madras.

வர்ஷச் சந்தா ரூ. 3—0—0.] [ஸஞ்சிகை 1-க்கு அணா 4

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
6 - OCT 1925
MADRAS

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

# வேதாந்த தீபிகை.

பத்ராதிபர்
கார்யதர்சி } ஆர். ஸ்ரீநிவாஸ ராகவ அய்யங்கார், எம். ஏ.

ஸம்புடம் 15.] குரோதன௵, புரட்டாசி௴. [ஸஞ்சிகை 12

[illegible]
[illegible]

[ஸ்ரீபாகவதம்-1-92-8]

ஸ்ரீ:

## பத்ராதிபரின் குறிப்புகள்.

### ஸ்வப்நம்.

நமது வேதாந்ததீபிகையின் இவ்வருஷத்திய ஆறுவது ஸஞ்சிகையில் ஸ்வப்நத்தைப் பற்றி தனித்தொரு வ்யாஸமெழுதுவதாக ப்ரதிஜ்ஞை பண்ணப்பட்டிருந்தது தீபிகாபிமானிகளுக்குத் தெரிந்த விஷயம். அதைப்பற்றி இங்கு கொஞ்சம் விசாரிப்போம்.

மனிதர்களுக்கு ஜாக்ரத், ஸ்வப்நம், ஸுஷுப்தி, மூர்ச்சா, என்று நான்கு தசைகள் உண்டு. நாம் விழித்துக்கொண்டிருக்கும்பொழுது அநுபவம் உண்டாகிற தசைக்கு ஜாக்ரத் என்றும், ஸர்வ இந்திரியங்களும் ஓய்வை அடைந்து பரமாத்மா நம்முடைய ஜீவாத்மாவை ஆலிங்கனம் செய்து நம்முடைய ஜீவாத்மாவுக்கு ஸுகம் உண்டாகும்படிசெய்யும் தசைக்கு ஸுஷுப்தி என்றும், இந்த இரண்டு தசைகளுக்கும் நடுவில் ஸம்பவிக்கும் தசைக்கு ஸ்வப்நம் என்று பெயர். இந்த ஸ்வப்ந தசையில் நம்முடைய மனதைத் தவிர மற்ற இந்த்ரியங்களுக்கு ஓய்வு உண்டாகிறதே தவிர நாம் விழித்துக்கொண்டிருக்கும்பொழுது எவ்வளவு வேலையும் அநுபவமும் உண்டாகிறதோ அதுபோலவே மானஸிகமான வேலை



186753

யும் அனுபவமும் உண்டாகிறது. ஆகையால் நாம் பெருமாளை ஸேவிப்பதாகவோ, உத்தமமான ஸுகத்தை அனுபவிப்பதாகவோ, திருடர்களால் துரத்தப்படுவதாகவோ, பிறரால் அடிக்கப்படுவதாகவோ, ஸ்வப்நம் கண்டால், அப்பொழுது ஸுகத்தையோ துக்கத்தையோ அனுபவித்து மனதுக்கு ஸந்தோஷமோ துக்கமோ ஏற்படுவதுடன் விழித்துக்கொண்ட பிறகும்கூட அந்த ஸுகத்தாலேயோ துக்கத்தாலேயோ உண்டான பலன்களை அனுபவிக்கிறோம். ஆகையால் விழித்துக்கொண்டிருக்கும்பொழுது ஸுகதுக்கானுபவங்கள் ஏற்படுவதுபோல் ஸ்வப்நதசையிலும் நமக்கு ஸுகதுக்கானுபவங்கள் உண்டாகின்றன.

இவ்விதம் நமக்கு ஸுகதுக்கானுபவம் ஏன் ஏற்படவேண்டுமென்று கேட்டால், நாம் செய்யும் பாப புண்யங்களுக்குத் தக்கபடி தண்டனையோ ஸுகத்தையோ நமக்கு உண்டாக்கவேண்டியதற்காக இவ்விதம் பகவான் ஸங்கல்பிக்கிறார். ஒவ்வொருவனுடைய கர்மானுகுணமாக அவனுக்குப் பிறப்பு, வாஸஸ்தானம், தொழில், ஸுகதுக்கங்கள் பகவானால் ஜாக்ரத் தசையில் ஏற்படுத்தப்படுகிறதோ அதுபோலவே ஸ்வப்ந தசையிலும் ஸுகதுக்கானுபவங்கள் உண்டாவதற்கு அவரவருடைய கர்மானுகுணமாக அவரவர்களுக்கு ஸ்வப்நத்தை ஏற்படுத்துகிறார்.

ஸ்வப்நத்தைப்பற்றி வேதத்தில் ப்ருஹதாரண்யக உபநிஷத்தில் 4-வது அத்யாயம், 2-வது ப்ராஹ்மணம், 10-வது வாக்யத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது,

**ந தத்ர ரதா ந ரதயோகா ந பந்தானோ பவந்த்யத ரதான் ரதயோகான் பத: ஸ்ருஜதே, ந தத்ரா஽஽நந்தா முத: ப்ரமுதோ பவந்த்யதா஽஽நந்தான் முத: ப்ரமுத: ஸ்ருஜதே ந தத்ர வேசாந்தா: புஷ்கரிண்ய: ஸ்ரவந்த்யோ பவந்த்யத வேசாந்தான் புஷ்கரிணீ: ஸ்ரவந்தீ: ஸ்ருஜதே ஸ ஹி கர்தா ॥.** (அவ்விடத்தில் ரதங்கள் குதிரைகள் ரஸ்தாக்கள் இல்லை. பிறகு ரதங்களையும் குதிரைகளையும் ரஸ்தாக்களையும் ஸ்ருஷ்டிக்கிறான். அவ்விடத்தில் ஆநந்தம் ஸந்தோஷம் பிறருக்குச் செய்வதால் உண்டாகும் ப்ரீதிகள் ஒன்றுமில்லை. பிறகு இவை எல்லாவற்றையும் ஸ்ருஷ்டிக்கிறான். அவ்விடத்தில் குட்டைகள் கிணறுகள் நதிகள் ஒன்றுமில்லை. அவைகளை அவன் ஸ்ருஷ்டிக்கிறான். ஏன் என்றால் ஸர்வத்தையும் ஸ்ருஷ்டிக்கிறவன் அவனல்லவா ?).

**ப்ராணேந ரக்ஷந்நவரம் குலாயம் பஹிஷ்குலாயாதம்ருதச்சரித்வா ।
ஸ ஈயதே஽ம்ருதோ யத்ர காமம் ஹிரண்மய: புருஷ ஏகஹம்ஸ: ॥**



**ஸ்வப்நாந்த உச்சாவசமீயமாநோ ரூபாணி தேவ: குருதே பஹூநி ।
உதேவ ஸ்த்ரீபி: ஸஹ மோதமாநோ ஜக்ஷதுதேவாபி பயாநி பச்யந் ॥**

[ப்ரு. உ. 4, 3, 12-13.]

(நமது சரீரத்தை ப்ராணவாயுவால் காப்பாற்றும்படி செய்துவிட்டு ஜீவாத்மா வெளியே போய் இஷ்டமான ஸுகத்தை அனுபவித்துவிட்டு வருகிறான். ஸ்வப்நத்தின் மத்தியில் நாம் ஸ்த்ரீகளுடன் விளையாடுகிறது போலவும், ஸாப்பிடுவது போலவும் பயங்களை அனுபவிப்பதுபோலவும் வாசாமகோசரமான ஆச்சர்யமான அநேக ரூபங்களை நம்முடைய கர்மானுகுணமாக பகவான் ஸ்ருஷ்டிக்கிறான்).

இதில் முதல் ச்ருதியில் ரதம் முதலியவை இல்லை, பிறகு அவன் ஸ்ருஷ்டிக்கிறான் என்பதில் விழித்துக்கொண்டிருக்கும் தசையில் காணப்படுகிற ரதம்போல் ஸ்வப்நத்தில் காணப்படுகிற ரதம் இல்லையென்று அர்த்தம். மேலும் இந்த ரதம் முதலியவை ஸ்வப்நம் காண்கிறவனுக்கு மாத்ரம் தெரியுமே தவிர மற்றவர்களுக்குத் தெரியாததால் 'இல்லை' என்று சொல்லப்பட்டிருக்கிறது. ரதம் முதலியவற்றை பகவான் தாத்காலிகமாக ஸ்வப்நம் காண்கிறவனுக்கு மாத்ரம் தெரியும்படி ஸ்ருஷ்டிக்கிறான். மற்றவர்களுக்குத் தெரியாததால் இல்லையென்று வேதம் சொல்லிற்றேதவிர அடியோடு இல்லையென்று சொல்லவில்லை. மேலும் மேலே சொல்லப்பட்ட இரண்டு ச்லோகங்களால் நமது பாப புண்யத்தின் அனுகுணமாக தோற்றங்களை நமக்கு ஸ்வப்நத்தில் பகவான் ஸ்ருஷ்டிக்கிறான். ஜீவாத்மா தேஹத்தைவிட்டு வெளியே போய் ஸுகதுக்கங்களை அனுபவிக்கிறது. ஜாக்ரத் தசையில் காணப்படும் வஸ்துக்களைவிட மிகவும் விலக்ஷணமாயும் ஆச்சர்யமுமான விஷயங்கள் ஸ்வப்நதசையில் காணப்படுகின்றன. ஸர்வ சக்தியுள்ள ஸர்வேச்வரனுக்கு இவைகளை ஸ்ருஷ்டிப்பது அஸாத்யமா. தன்னுடைய சக்தியால் பகவான் ச்ருஷ்டிக்கிறான் என்று வேதம் சொல்லுகிறது.

மேலும் ஸ்வப்நங்கள் வரப்போகிற ஸுகதுக்கங்களை ஸூசனம் பண்ணுகிறதுகள் என்றும் வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அதுஎங்கே எனில்,

**யதா கர்மஸு காம்யேஷு ஸ்த்ரியம் ஸ்வப்நேஷு பச்யதி ।
ஸம்ருத்திம் தத்ர ஜாநீயாத் தஸ்மிந் ஸ்வப்நநிதர்சநே ॥**

சா. 5. 2. 8.

'ஏதாவது ஒரு காம்ய கர்மாவை நாம் செய்யும்பொழுது ஒரு ஸ்த்ரீயை ஸ்வப்நத்தில் கண்டால் அவன், தான் செய்யும் கார்யம் ஸித்தி

நம்முடைய ஸித்தாந்தத்திலே பகவானுக்கு ஸகல கல்யாணகுணங்களையும் அகடிதகடனாசக்தியையும் ஒப்புக்கொள்வதினால் க்ஷணகாலமிருக்கிற விசித்ரமானவும் ஆச்சர்யமாய்க் காணப்படும் ஸ்வப்நபதார்த்தங்களையெல்லாம் ஸர்வ சக்தியுள்ள பகவான் நம்முடைய பாப புண்யத்துக்குத்தக்கபடி தண்டனையாகவோ அனுக்ரஹமாகவோ ஸ்ருஷ்டிக்கிறார் என்று பூர்வாசார்யர்கள் நிஷ்கர்ஷம் செய்திருக்கிறார்கள்.

இவ்விஷயத்தைப்பற்றி ஸ்ரீசங்கர ஸ்ரீராமாநுஜ பாஷ்யங்களின் வ்யத்யாஸத்தை எடுத்து எழுதுவது ஸங்கதமாகும். ஆனால் அது விரிவாகப் போகுமாதலால் பின் தனியாய் எழுதப்படும்.

## ஸ்ரீ வேதாந்ததேசிகன் ஸித்தாந்த அபிவர்த்தினி ஸபா, ஸ்ரீரங்கம்.

ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீதேசிகனுடைய ஸித்தாந்தத்தை ரக்ஷிப்பதற்கும் அதை வ்ருத்தி செய்வதற்கும் ஸ்ரீ. உப. வி. டி. சடகோப அய்யங்கார் ஸ்வாமியை அக்ராஸநாதிபதியாகக் கொண்டு மேலே குறிக்கப்பட்ட பெயருடன் ஒரு ஸபை ஏற்பட்டிருக்கிறது. அநேக ப்ரமுகர்கள் சேர்ந்து ஒரு கமிட்டியை நியமித்து கார்யத்தை நடத்திவருகிறார்கள். இந்த ஸபையின் நோக்கங்களில் ஸ்ரீவேதாந்ததேசிகன் திவ்ய ஸூக்திகளையும், ப்ரபந்தம், பாஞ்சராத்ரம் முதலிய ஸம்ப்ரதாய க்ரந்தங்களைப் படிப்பிக்கிறது, ஒரு லைபரரி ஏற்படுத்துவது, வித்வான்களைக் கொண்டு ஸம்ப்ரதாய விஷயங்களை உபந்யாஸம் செய்விப்பது, வித்வான்களுக்கு ஸம்பாவனை செய்வது முதலியவை முக்கியமாகக் காணப்படுகின்றன. இந்த ஸபை பகவத் க்ருபையால் ஸரிவர தன்னுடைய வேலையைச் செய்துவந்தால் உலகத்துக்கு மிகவும் உபயோகமாகயிருக்கும். லைபரரி ஏற்படுத்துவது மிகவும் மேலான கார்யம்.

நிர்வாக கமிட்டியில் ஒரு வித்வானைக்கூடக் காணோம். வித்வான்களுடைய ஸஹாயமில்லாமல் ஸம்ப்ரதாய விஷயம் அபிவ்ருத்தி அடைவது கஷ்டம். இந்தக்குறையை ஸபையோர் சீக்கிரத்தில் நிவர்த்திசெய்து கொள்வார்களென்று நம்புகிறோம்.

## ஸம்மதி யோக்ய வயதை நிர்ணயிக்கும் மசோதா.

நம்முடைய ஆசாரத்தை சீர்திருத்தவேண்டுமென்று டில்லி ராஜப்ரதிநிதி ஸபையில் டாக்டர் கௌர் என்பவரால் கொண்டு வரப்பட்ட மசோதா சென்ற மார்ச்சுமீ"த்தில் நடந்த ஸபையில் சட்டமாக்கப்பட்டது.



என்று ஹிந்து பத்ரிகையில் தவறுதலாக எழுதப்பட்டபடியால் அதைத் தழுவி இவ்வருஷத்து தீபிகை ஏழாவது ஸஞ்சிகையில் தவறுதலாய் எழுதப்பட்டுவிட்டது. ஆனால் அப்போது அது சட்டமாக நிறைவேறவில்லை. இந்தியாவில் புருஷர்கள் வரவர பலக்குறைவை அடைந்து வருவதால் கொஞ்சகாலத்தில் ராணுவத்துக்கு யோக்யமான பலசாலிகள் கிடைப்பது அரிதாகப்போய்விடும் என்று நினைத்து தேசக்ஷேமத்திற்கு இந்த மசோதாவை வெகு ஆவலுடன் சட்டமாக்க முயன்று இந்த ஸெப்டம்பர்மீ" நடந்த ஸபையில் சட்டமாக்கிவிட்டார்கள். ஏற்கனவே இந்த சட்டமாவது:— பன்னிரண்டு வயது நிரம்பாத கன்னிகையுடன் ஸம்போகம் செய்வதானது அவள் ஸம்மதித்தாலுங்கூட பலாத்கார ஸம்போகம் என்னும் குற்றமாய் அது த்வீபாந்தரம் கொண்டுபோகப்படுதல் அல்லது பத்து வர்ஷபர்யந்தமான கடுங்காவல் முதலிய சிக்ஷைக்கு உட்படுத்தக்கூடியதாக இருந்தது. இதை இப்போது இரண்டாகப் பிரித்து ஏற்கனவே கல்யாணம் ஆன பெண்கள் விஷயத்தில் 13 வயது நிரம்பாத பெண்களிடம் ஸம்போகம் செய்வதும், ப்ரௌடா விவாஹம் செய்யும் ஜாதிப் பெண்கள் விஷயத்தில் 14-வயது நிரம்பாத பெண்களிடம் ஸம்போகம் செய்வதும் குற்றமென்றும் அது மேலே குறிக்கப்பட்ட சிக்ஷைக்கு உட்படுத்தக்கூடியது என்றும் தீர்மானித்து விட்டார்கள்.

ஸ்ரீ:

## யக்ஷப்ரச்னம்.

(ஸ்ரீ. உ. ப. த. வி. ஸ்ரீநிவாஸாசார்யர்.)

மஹாபாரதம் என்பது ஒரு பெரிய இதிஹாஸம். இதற்கு இப்பெயர் இடுகுறியல்ல, "[illegible]" என்கிற ப்ரமாணப்படி இது மற்ற க்ரந்தங்களால் எல்லாவற்றையும்விட மஹத்தாக இருப்பதாலும் அர்த்த கௌரவமுள்ளதாக இருப்பதாலும் மஹாபாரதம், என்று காரணப்பெயர். இதிஹாஸலக்ஷணம் யாதெனில் "[illegible]" (தர்மம் அர்த்தம் காமம் மோக்ஷம் என்கிற நான்கு புருஷார்த்தங்களையும் நன்கு துலக்கிக் காட்டுகிறதும் பூர்வீகர்களான புண்ய புருஷர்களுடைய பாவனமான சரித்திரங்களை விரித்து உரைக்கின்றதும் பற்பல பூர்வகதைகளுடன் கூடியதுமான க்ரந்தத்தை பெரியோர்கள் இதிஹாஸம் எனக்கூறுகின்றனர்.) இதி

ஹாஸங்கள் வேதங்களுக்கு உபப்ருஹ்மணங்கள். உபப்ருஹ்மணங்களான வேதங்களினின்று கிரஹிக்கப்பட்டிருக்கிற அர்த்தங்களிலுள்ள ஸம்சயங்களை தெரியச்செய்கிற தன்மையுள்ள கிரந்தங்கள். அவற்றுள் ராமாயணம் மஹாபாரதம் என இவ்விரண்டு கிரந்தங்களே ப்ரஸித்தி பெற்றவைகள். இவ்விரண்டிலும் ராமாயணம் சுருக்கமான இதிஹாஸம். மஹாபாரதம் விரிவான இதிஹாஸம் வேதங்களுக்கு உபப்ருஹ்மணங்களான புராணங்களைக்காட்டிலும் இதிஹாஸங்கள் சிறப்புற்றவைகளாதலால் "இதிஹாஸ புராணாப்யாம் வேதம் ஸமுபப்ரும்ஹயேத்" என்கிற சுலோகத்தில் இதிஹாஸம் முந்தி எடுக்கப்பட்டது. இதை அறிஞர்கள் 'ஐந்தாவதுவேதம்' எனக் கூறுகின்றனர். 'ப்ரத்யக்ஷேணானுமித்யா வா யஸ்தூபாயோ ந புத்யதே ஏனம் விதந்தி வேதேந தஸ்மாத் வேதஸ்ய வேததா॥' (ப்ரத்யக்ஷ ப்ரமாணத்தாலும் அனுமான ப்ரமாணத்தாலும் எந்த ஸுகப்ராப்தி உபாயமும் துக்க நிவ்ருத்தி உபாயமும் அறியப்படுகிறதில்லையோ அத்தகைய உபாயத்தை அறிவிப்பிக்கிற தன்மை வாய்ந்திருத்தலால் இதை வேதமென்று அறிஞர்கள் பகர்கின்றனர்) என்கிற அர்த்தமுள்ள முற்கூறப்பட்ட சுலோகத்திலுள்ள வேதலக்ஷணம் பொருந்தி இருத்தலால் இந்த பாரதமென்கிறமஹேதிஹாஸமும் வேதமென்று கூறப்படுகிறது. இதற்கு 'ஜயம்' என்றும் ஒருபெயர் உண்டு 'நாராயணம் நமஸ்க்ருத்ய நரம் சைவ நரோத்தமம் । தேவீம் ஸரஸ்வதீம் வ்யாஸம் ததோ ஜயமுதீரயேத் ।' என்கிற மஹாபாரத்தினது முதலாவது சுலோகத்திலுள்ள 'ஜய' சப்தத்திற்கு பாரதமே பொருளென்று அபியுக்தர்கள் கூறுகின்றனர். இதுமற்றும் ஒருவிதத்தாலும் மஹாபாரதத்தைக் குறிக்கிறது. அதெங்ஙனமெனில், கடபயாதியான எண்ணிக்கையில் 'ஜ' என்கிற எழுத்து எட்டைக் குறிக்கிறது. 'ய' என்பது ஒன்றைக்குறிக்கிறது, "ஸங்க்யானாம் வாமதோ கதி:" என்கிற நியாயத்தை அனுஸரித்து திருப்பிப் படித்தால் 'யஜ' என்று ஆயிற்று, அதாவது பதினெட்டு, பதினெட்டு பர்வங்களடங்கிய பாரதமென்று பொருள் படுகிறது. இக்காரணத்தாலும் ஜய சப்தமானது மஹாபாரதவாசகம், ஜயத்தைக்கொடுக்கிற ஸ்வபாவ முள்ளதாக இருப்பதாலும் ஜயமென்கிறபெயர் இதற்கு பொருத்தமுள்ளது இத்தகைய மகிமை வாய்ந்த மகாபாரதத்திலுள்ள ஆரண்ய பர்வத்தின்கடைசி அத்தியாயத்திற்கு முந்தினதான முன்னூற்றுப் பதினொன்காவது அத்தியாயத்தில் இந்த யக்ஷப்ரச்னங்கள் அடங்கி இருக்கின்றன இது யக்ஷனென்று தன்னை மறைத்து சொல்லிக்கொண்ட தர்மதேவதையின் வினாக்கள். இவை அனைத்துக்கும் யுதிஷ்டிரர் உத்தரம் கூறி இருக்கிறார். இந்த வினாக்கள் நூற்றிருபத்தைக்கு



மேற்பட்டவையாகும் இவ்வளவே. இந்த வினாவிடைகளுக்குள் எவைகள் ஸாரதமங்களோ அவைகளை இங்கு சற்று எடுத்துக்கூற முயற்சிக்கிறேன். "ஸாஸார ஸூஸாராஷு ஸாரம்ஸாராதாரம்ஸ்ருஜேத் । ஸஜேத் ஸாரதரம், ஸாரஜ்ஞ: ஸ்ரீதாகா இவாம்ருதம் ॥" என்கிற நியாயத்தை அறிந்த மஹாபுருஷர்களால் அமிருதம்போல் அவாவுடன் பருகத்தக்க தர்ம ரஹஸ்யங்கள் இவைகளே. இவைகள் சற்று கவனிக்கத் தக்கவைகள்.

(வினா). கிம்ஸ்வித் குருதரம் பூமே: கிம்ஸ்விதுச்சதரம் ச காத் ।
கிம்ஸ்வித் சீக்ரதரம் வாயோ: கிம்ஸ்வித் பஹுதரம் த்ருணாத் ॥"

(பொருள்) பூமியைவிட மிகப்பெரிதாக இருக்கிற வஸ்து எது? ஆகாயத்தைக் காட்டிலும் மிக்க உயர்ந்த வஸ்து எது? காற்றைவிட எது அதிகவேகமுள்ளது? துரும்பைவிட எது அதிகம் அஸாரமானது?

(விடை). மாதா குருதரா பூமே: பிதா உச்சதரஸ்ச காத் ।
மன: சீக்ரதரம் வாதாச் சிந்தா பஹுதரீ த்ருணாத் ।

(பொருள்) பூமியைவிடத் தாய் மிகப் பெரியவள், அவ்வாறே ஆகாயத்தைவிட தந்தை மிகவும் உயர்ந்தவர், மனது காற்றைவிட அதிசீக்கிரமாகச் செல்லும் தன்மையுள்ளது, கவலையானது துரும்பைவிட மிக்க அஸாரமானது.

(வினா). கிம்ஸ்வித் ப்ரவஸதோ மித்ரம் கிம்ஸ்வின் மித்ரம் க்ருஹே ஸத: ।
ஆதுரஸ்ய ச கிம் மித்ரம் கிம்ஸ்வின் மித்ரம் மரிஷ்யத: ॥

(பொருள்) தேசாந்தரம் போகிறவனுக்கு எவன் துணை? வீட்டிலிருப்பவனுக்கு யார் துணை? நோயாளிக்கு எவன் தோழன்? சாகப்போகிறவனுக்கு எவன் உற்றதுணையாயிருப்பவன்?

(விடை). வித்யா ப்ரவஸதோ மித்ரம் பார்யா மித்ரம் க்ருஹே ஸத: ।
ஆதுரஸ்ய பிஷங் மித்ரம் தானம் மித்ரம் மரிஷ்யத: ।

(பொருள்) தேசாந்தரம் செல்பவனுக்கு கல்வி ஒன்றுதான் உற்றதுணை, வீட்டிலிருப்பவனுக்கு மனைவிதான் நல்ல துணை. நோயாளிக்கு வைத்தியன் துணை, சாகப்போகிறவனுக்கு தானமே துணை.

(வினா). கிம்ஸ்விதாத்மா மனுஷ்யஸ்ய கிம்ஸ்வித் தைவக்ருத: ஸகா ।
உபஜீவனம் கிம்ஸ்விதஸ்ய கிம்ஸ்விதஸ்ய பராயணம் ।

(பொருள்) மனிதனுக்கு ஆன்மா எது? தெய்வத்தினால் உண்டாக்கப்பட்டிருக்கிற தோழன் யார்? இந்த மனிதனுக்கு எது அண்டிப்பிழைப்பாக ஏற்படுகிறது? இவனுக்கு எது முக்கியமான கதி?

(விடை). புத்ர ஆத்மா மனுஷ்யஸ்ய பார்யா தைவக்ருத ஸகா ।
உபஜீவனஞ்ச பர்ஜன்யோ தானமஸ்ய பராயணம் ॥

(பொருள்) மனிதனுக்கு புதல்வன்தான் ஆன்மா, மனைவிதான் தெய்வத்தால் ஏற்படுத்தப்பட்ட ஸகி, இவனுடைய ஜீவனத்திற்கு ஸாதகமாகயிருப்பது மேகம், இவனுக்கு தானமே கதி.

(வினு)- கிம் நு ஹித்வா ப்ரியோ பவதி கிம் நு ஹித்வா ந சோசதி ।
கிம் நு ஹித்வார்த்தவான் பவதி கிம் நு ஹித்வா ஸுகீ பவேத் ॥

(பொருள்) எதைவிட்டு மனிதன் எல்லோருடைய ப்ரீதிக்கும் பாத்திரனுக ஆகிறுன்? எதை இழந்து துக்கத்தை அடைகிறுனில்லை? எதை இழந்து சிறந்த செல்வமுள்ளவனுக ஆகிறுன்? எதை இழந்து சுகமுடையவனுக ஆகலாம்?

(விடை), மானம் ஹித்வா ப்ரியோ பவதி க்ரோதம் ஹித்வா ந சோசதி ।
காமம் ஹித்வார்த்தவான் பவதி லோபம் ஹித்வா ஸுகீ பவேத் ॥

(பொருள்) மனிதன் கர்வத்தை இழந்து எல்லோருடைய ப்ரீதிக்கும் பாத்திரனுகிறுன். கோபத்தை இழந்தால் சோகத்துக்கு ஆள்படுகிறுனில்லை. காமத்தை இழந்து சிறந்த செல்வமுள்ளவனுக ஆகிறுன். பேராசையைவிட்டு ஸுகமுடையவனுக ஆகலாம்

(வினு). கிமர்த்தம் ப்ராஹ்மணே தானம் கிமர்த்தம் நடநர்த்தகே ।
கிமர்த்தஞ்சைவ ப்ருத்யேஷு கிமர்த்தஞ்சைவ ராஜஸு ॥

(பொருள்) யாது காரணம்பற்றி பிராஹ்மணர்களிடத்தில் தானம் செய்யப்படுகிறது? நடனிடத்திலும் நர்த்தகனிடத்திலும் எதற்காகப் பொருள் ஈட்டப்படுகிறது? வேலைக்காரர்களிடம் எதற்காக தனம் கொடுக்கப்படுகிறது? எதற்காக ராஜாக்களுக்கு வரி கொடுக்கப்படுகிறது?

(விடை.) தர்மார்த்தம் ப்ராஹ்மணே தானம் யசோர்த்தம் நடநர்த்தகே ।
ப்ருத்யேஷு ஸங்க்ரஹார்த்தம் வை பயார்த்தஞ்சைவ ராஜஸு ।

(பொருள்) தர்மத்திற்காக பிராஹ்மணர்களிடம் தானம் செய்யப்படுகிறது. நட்டுவனிடத்திலும் கூத்தாடியினிடத்திலும் கீர்த்திக்காக பொருள் ஈட்டப்படுகிறது. தன் வசப்படுத்திக்கொள்வதற்காக வேலைக்காரர்களிடம் தனம் கொடுக்கப்படுகிறது. கொடாவிட்டால் அநர்த்தம் நேரிடும் என்கிற பயத்தினல் அரசர்களுக்கு வரி கொடுக்கப்படுகிறது.

(வினு.) ம்ருத: கதம் ஸ்யாத் புருஷ: கதம் ராஷ்ட்ரம் ம்ருதம் பவேத் ।
ச்ராத்தம் ம்ருதம் கதம் வா ஸ்யாத் கதம் யஜ்ஞோ ம்ருதோ பவேத் ॥



(பொருள்) மனிதன் எவ்வண்ணம் மரித்தவனுக ஆவான்? அரசனுடைய ஆஞைக்கு உட்பட்டிருந்த தேசமானது எவ்வண்ணம் உயிர் துறந்ததாக ஆகும்? ச்ராத்தமானது எப்படி அனுஷ்டிக்கப்பட்டால் ஜீவனற்றதாக ஆகும்? யாகம் எவ்விதம் செய்தால் மரித்ததாக ஆகும்?

(விடை.) ம்ருதோ தரித்ர: புருஷ: ம்ருதம் ராஷ்ட்ரமராஜகம் ।
ம்ருதமச்ரோத்ரியம் ச்ராத்தம் ம்ருதோ யஜ்ஞஸ்த்வதக்ஷிண: ॥

(பொருள்) பொருளில்லாத மனிதன் மரித்தவனே. அரசனை இழந்த அல்லது அரசனில்லாத ராஷ்ட்ரம் மரித்ததே. வேதாத்தியயன ஸம்பன்னனுன ப்ராஹ்மண நிமந்த்ரணமில்லாத ச்ராத்தம் உயிரில்லாதது. ஸம்பூர்ண தக்ஷிணையில்லாத யாகம் உயிர் துறந்தது.

(வினு.) தப: கிம்லக்ஷணம் ப்ரோக்தம் கோ தமச்ச ப்ரகீர்த்தித: ।
க்ஷமா ச கா பரா ப்ரோக்தா கா ச ஹ்ரீ: பரிகீர்த்திதா ॥

(பொருள்) தவம் எவ்விதமான லக்ஷணத்துடன் கூடியதென்று சொல்லப்பட்டிருக்கிறது? எது தமம் என்று பெரியோர்களால் கூறப்பட்டிருக்கிறது? எது உயர்ந்த பொருமையெனப் பகரப்பட்டிருக்கிறது? எது வெட்கமென்று கூறப்பட்டிருக்கிறது?

(விடை.) தப: ஸ்வதர்மவர்த்தித்வம் மனஸோ தமனம் தம: ।
க்ஷமா த்வந்த்வஸஹிஷ்ணுத்வம் ஹ்ரீரகார்யநிவர்த்தனம் ॥

(பொருள்) தன்னுடைய வர்ணுச்ரம தர்மத்தில் நிலைபெற்றிருத்தலே தவமாகும். மனதை விஷயங்களினின்று அடக்குவதுதான் தமம். சுகம் துக்கம் இவ்விரண்டையும் பொறுத்துக்கொள்ளுதலே க்ஷமை. கெட்ட செய்கையினின்று விலகுதல் வெட்கம் என்று கூறப்படும்.

(வினு.) க: சத்ருர் துர்ஜய: பும்ஸாம் கச்ச வ்யாதிரனந்தக: ।
கீத்ருசச்ச ஸ்ம்ருத: ஸாதுரஸாது: கீத்ருச: ஸ்ம்ருத: ॥

(பொருள்) எவன் எவ்விதத்தாலும் ஜயிக்கமுடியாத சத்துரு? எது தீராத வியாதி? எப்படிப்பட்டவன் ஸாதுவென்று எண்ணப்பட்டிருக்கிறுன்? எவ்வித ஸ்வபாவமுள்ளவன் அஸாதுவென்று எண்ணப்பட்டிருக்கிறுன்?

(விடை.) க்ரோத: ஸுதுர்ஜய: சத்ரு: லோபோ வ்யாதிரனந்தக: ।
ஸர்வபூதஹித: ஸாதுரஸாதுர் நிர்தய: ஸ்ம்ருத: ॥

(பொருள்) கோபமென்பது எவ்விதத்தாலும் ஜயிக்கமுடியாத சத்துரு. பேராசையானது தீராத வியாதி. எல்லா உயிர்களுக்கும் நன்மையைப் பயக்குகிறவன் ஸாது? தயையில்லாதவன் அஸாதுவென்று எண்ணப்பட்டிருக்கிறுன்.

(வினா.) கிம் ஸ்தைர்யம் ருஷிபி: ப்ரோக்தம் கிம் ச தைர்யமுதாஹ்ருதம் ।
ஸ்நானம் ச கிம் பரம் ப்ரோக்தம் தானம் ச கிமிஹோச்யதே ॥

(பொருள்) மஹர்ஷிகளால் எது உறுதியான நிலையென்று சொல்லப்பட்டிருக்கிறது? எது தைரியமென்று உதாஹரிக்கப்பட்டிருக்கிறது? எது சிறந்த ஸ்நானமென்று கூறப்பட்டிருக்கிறது? இவ்வுலகில் எது தானமென்று உரைக்கப்பட்டிருக்கிறது?

(விடை.) ஸ்வதர்மே ஸ்திரதா ஸ்தைர்யம் தைர்யமிந்த்ரியநிக்ரஹ: ।
ஸ்நானம் மநோமலத்யாகோ தானம் வை பூதரக்ஷணம் ॥

(பொருள்) தன்னுடைய வர்ணாச்ரமதர்மத்தில் நிலைபெற்றிருத்தலே உறுதியான நிலை. இந்திரியங்களை அடக்குதல் தைர்யம். அந்தக்காணத்திலுள்ள அஜ்ஞானமாகிற அழுக்கை அழித்தல் ஸ்நானம். பிராணிகளைக் காப்பாற்றுதலே தானம்.

(வினா.) ராஜந்! குலேந வ்ருத்தேந ஸ்வாத்யாயேந ச்ருதேந வா ।
ப்ராஹ்மண்யம் கேந பவதி ப்ரப்ரூஹ்யேதத் ஸுநிச்சிதம் ॥

(பொருள்) அரசே! ப்ராஹ்மண்யமானது குலத்திலுண்டாகிறதா? அல்லது நடத்தையினாலா? அல்லது வேதமோதுவதினாலா? அல்லது சாஸ்திரங்களைக் கற்பதினாலா? எதினாலுண்டாகிறது? இதை நன்கு ஆலோசித்து நிச்சயமாகச் சொல்வாயாக.

(விடை). ச்ருணு யக்ஷ! குலம் தாத ந ஸ்வாத்யாயோ ந ச ச்ருதம் ।
காரணம் ஹி த்விஜத்வே ச வ்ருத்தமேவ ந ஸம்சய: ॥

(பொருள்) ஹே யக்ஷ! நீ கேள்: ப்ராஹ்மண்ய விஷயத்தில் குலம் காரணமல்ல, ஐயனே! வேதாத்தியயனமும் சாஸ்திர பயிற்சியும் காரணமல்ல; நல்லநடத்தையே காரணம். ஸந்தேஹமில்லை.

ஸ்ரீ:

## கடிதங்கள்.

### அதிகரண ஸாராவளீ பாடபேத விமர்சம்.

### I

(மஹாமஹோபாத்யாய பண்டிதரத்நம் லக்ஷ்மீபுரம் ஸ்ரீ. உ.வே. ஸ்ரீநிவாஸாசார்யஸ்வாமி.)

நம் தேசத்தில் க்ரந்தங்களை முத்ராபணம் செய்கிறவர்கள் ஸாதாரணமாய் தங்களுக்கு உசிதமென்று தோன்றும் பாடத்தை அங்கீகரித்து பாடாந்தரங்களைக் கூடத் தெரிவிக்காமல் ப்ரசுரப்படுத்துகிறார்கள். ஆகையால் இப்படிப்பட்ட ஸந்தர்ப்பங்களில் வரும் கஷ்டங்களைப் பராமர்சித்து பரீக்ஷக முத்ராபண கர்த்தாக்கள் பாச்சாத்ய ஸம்ப்ரதாயத்தைக்கொண்டு, மத்யஸ்த த்ருஷ்டியால் ஸகல பாடங்களையும் சேர்த்து அச்சிடுகிறார்கள்.



ப்ராக்ருத விஷயத்தில் அப்படி அச்சிடாத பழைய புஸ்தகங்களைப்பார்த்து விமர்சிக்க வேண்டியிருப்பதால் மைசூர் ஓரியண்டல் லைப்ரேரியில் சில மூலவ்யாக்யாந புஸ்தகங்களைப் பார்த்ததில் 619, 876, 3756 இந்த நம்பர்களுள்ள மூன்று புஸ்தகங்களில் "கௌசஸஹஜாம்" என்று பாடமிருக்கிறது; 3653 நம்பருள்ளதில் "கௌசஹரஜாம்" என்றும் 1160, 3030, இந்த நம்பர்களில் "கோசஹாஜாம்" என்று பாடங்கள் தெரியவருகின்றன. 419, 3756, இந்த நம்பர்களுள்ள வ்யாக்யாந புஸ்தகங்களில் "ப்ரஹ்மாதிசரீர வாரணாம்" என்றுபாடம் காணப்படுகிறது. பாக்கி புஸ்தகங்களில் முத்ரித புஸ்தகம் ப்ரகாரமே தெரியவருகிறது "கோசஹாஜா" என்கிறபாடம் ஒரு புஸ்தகத்திலும் காணவரவில்லை.

இப்படியிருக்க; "கௌச" என்னும் பாடத்தில் ச்லோகம் ஸ்வரஸமாக அர்த்தமாகிறதில்லை. "உத்வேஷ்டபதாம்" என்று வ்யாக்யாநம் ஸாஹித்ய அலங்கார ரஸிகஹ்ருதயங்களுக்கு ஹ்ருதயங்கமம் ஆகிறதில்லை. மேலும் வ்யர்த்த விசேஷணதோஷம் ப்ரஸங்கிக்கும். ஸ்ரீதேசிகன் இப்படி ப்ரயோகம் செய்யமாட்டார். "கோசஹாஜாம்" என்கிற பாடத்தில் 'கோச' சப்தத்துக்கு நாநார்த்தரத்நமாலையில் "கோசோऽஸ்த்ரீ குட்மலே கோசே [illegible] ஸாஹ்யோ: । [illegible] ஸ்யாதயோ:" என்றும், அமரஸிம்ஹனிடத்தில்—"[illegible] கோசஸ்ஸ: । [illegible] ப்ரஹ்மஸ்த்ரீணாம் [illegible] கோசஸ்யம் ப்ரஸிதம் ॥" என்றும் இருக்கிறபடியால் சரீரபரமாக வ்யாக்யாநம் செய்தால் "நஹவை ஸசரீரஸ்ய" இத்யாதி ச்ருதி ஸங்கதமாகிறது. "தேஹஹாஜம்" என்று ப்ரயோகிக்கலாயிருக்கிறபடியால் கோச சப்தத்துக்கு ஸ்வாரஸ்யமில்லை. ஆவரகம், 'கஞ்சுகம்' என்று அர்த்தம் செய்தாலும் ஒருவிதமாக ப்ரக்ருதம் ஸங்கதமாகிறது. ஆகிலும் ஸம்ப்ரதாய ஸித்தமான வ்யாக்யான ஆநுகூல்யம் சேராது. "கௌசஹாஜாம்" என்கிற பாடத்தில் "நஹவை ஸசரீரஸ்ய" என்னும் ச்ருதியின் ஸ்வாரஸ்யமுண்டு. ஆனால் வ்யாக்யானத்துக்கு (அதிகரண சிந்தாமணிக்கு) அநுகுணமாக இல்லை.

இப்படியிருக்க பரீக்ஷக பராமர்சமிந்த ப்ரகாரமிருக்கலாம். "கௌசஹாஜாம்" என்கிறதாகவே ப்ரயோகம் இருக்கவேண்டும். அது அர்த்தமாகாமல் "கோச" என்று திருத்தப்பட்டிருக்கிறது. பிற்பாடு அதுவும் ஸ்வரஸமாக அர்த்தமாகாமல் "கௌச" என்று ஏற்பட்டிருக்கலாம். இது

ஒருவழி. "கேஶ" என்கிற பாடமர்த்தமாகாமல் "க்லேஶ" என்று ஆயிருக்கலாம் இப்படி 'ல' காரத்தையும் தீர்க்கத்தையும் 'ர' காரத்தையும் பரஸ்பர விரோதத்தால் கழித்துப்பார்த்தால் "கேஶ" என்றே யொழிகிறது. வ்யாக்யானமும் ஸங்கதமாகிறது. இதையே திருவுள்ளம் பற்றி ஸ்ரீதேசிகன் ப்ரயோகித்திருக்கலாம் இந்தப்படி கண்டுபிடித்த ஸ்ரீசேட்டலூர் நரஸிம்ஹாசார்யஸ்வாமி ஸந்நிதியில் விசேஷ க்ருதஜ்ஞதையை நிஷ்பக்ஷபாதமாகத் தெரிவிக்கிறேன்.

ஆனால் இந்த அதிகரணம் பரதேவதா நிர்ணய ப்ரகரணமல்ல என்று சங்கிக்கலாம். ப்ருஹ்ம ருத்ராதிகளுக்கே பகவானோடு அபேதம் துர்லபமாக இருக்க இதர ஜீவர்களைப் பற்றிக்கேட்பானேன் (கிமுத) என்னும் அபிப்ராயத்தால்சங்கிதமான வபலாபத்தைப் பரிஹரிக்கையில் தாத்பர்யம் என்று கொண்டால் ஸங்கதமாகு மென்று தோன்றுகிறது.

ஆகையால் "வ்ருவாஹ" என்கிற பாடத்தைக்காட்டிலும் "ப்ருஹாவ" என்கிற பாடம் யுக்தமாயு மிருக்கலாம் ஸம்ஶ்ரோப்ருஜேந்த்ரு ந்யாயமும் அதின் விவரணமும், 'ஸாத்ருவைஷம்ய' பதப்ரயோகமும், எல்லாம் ஸமஞ்ஜஸமாகிறது. கேஶமோ, க்ரோஶமோ, க்லேஶமோ? இவற்றில் எதானாலும் ச்லோகத்தின் உத்தரார்த்தமே (பின்பகுதியே) ஸ்வரஸமாக அந்விதமாகாதென்று ஸஹ்ருதய ஹ்ருதய ஸம்மதம்.

ஆகையால் தான் இவ்வளவு பாடவிகல்பங்களுக்கு அவகாசம் "கேஶஹாஜா" என்று அநுஸ்வாரத்தை (மகாரத்தை) கழித்து விடுவதற்கும் அவகாசம் ஏற்பட்டது.

ஆகையால் 'கேஶஹாஜாம்' என்கிறபாடமே ஸாம்ப்ரதாயிகம், ஸ்வாரஸிகம் என்று தோன்றுகிறது.

## 2

(ஸ்ரீ. உப. வே. இ. ரங்கநாதா சார்யர்)

இவ்வருஷத்தில் பேரருளாளனுடைய வைசாக உத்ஸவத்தில் நடந்த வித்வத்ஸதஸ்ஸில் ஹோத்ராவேத்ருயிகரணத்தின் கயிகரண ஸாரவளி ச்லோகத்தைப் பற்றி நடந்த சர்ச்சயை அனுஸரித்து ஸ்ரீ. உப வே. சே. நரஸிம்ஹாசாரியர்ஸ்வாமி எழுதியிருப்பதை ஆடி மாஸத்திய தீபிகையில் ஸேவித்துக்கொண்டேன். அதில் மந்தமதியான அடியேனுக்குண்டான சில ஸம்சயங்களை நிவ்ருத்திசெய்துக்கொள்ளக் கருதி இரண்டொரு பங்க்திகளை எழுதத்துணிகிறேன்.



ஸகோ யஶஸ்வீ தேஜஸ்ஸ ஸவதி விவிதாநந்த ...வைக ஹோதா
விஶ்வ தேவ: ப்ரஹோத்ருகல்பஶ்ச தீவதேக விஶ்வ...வா ந ஸ ...॥
உதயம் ஜீவேஶவிபோ ...நா: கோஶஹாஜாம் ஶ்ருதீநாம்
ஸம்ஶ்ரோப்ருஜேந்த்ரு ந்யாயநீத்யா ஶ்ருதிஷு யஹ தாம் ஸாத்ருவைஷம்யஶீ॥

என்பது ஸாராவளி ஸ்லோகம்.

இதை விமர்சிக்கத்துடங்கின இந்தஸ்வாமி 256-ம் பக்கத்தில் சில ஸ்ரீகோசங்களில் "க்லேஶஹாஜாம் ஶ்ருதீநாம்" என்றும் சில ஸ்ரீகோசங்களில் 'கேஶஹாஜாம்' என்றும், சில கோசங்களில் 'கேஶஹாஜா ஶ்ருதீநாம்' என்றும் பாடபேதங்கள் காணப்படுகின்றன என்று எழுதி, மேல் அந்த மூன்றுவிதமான பாடங்களுக்கும் அஸ்வாரஸ்யம் சொல்லுகிறார். இதனால் தாம் நிஷ்கர்ஷிக்கப்போகிற, 'கேஶஹாஜாம்' என்கிறபாடம் கோசகதமன்றிக்கே தம்முடைய உத்ப்ரேக்ஷா கல்பிதமென்று தோன்றுகிறது. மேல் இந்தக்கல்பிதபாடத்தை எடுத்து கேஶஹாஜாம் என்கிறபாடமே மிகுந்தஸ்வாரஸ்ய முடையதாய் இருக்கிறதென்று ஆரம்பித்து, கேஶஹாஜாம் என்கிற, பதத்திற்கு அர்த்தத்தையும் எழுதி, மேல் இந்தப்பாடம் சிந்தாமணி வ்யாக்யானத்தோடு மிகவும் பொருத்தமுடையதாய் இருக்கிறதென்று அருளிச்செய்திருக்கிறார். இங்கு 'ப்ருஹதாரண்யகஶ்ருதிவாக்ய பரமான 'கேஶஹாஜாம்' என்கிறபாடம் ப்ருஹதாரண்யகஶ்ருதி வ்ருவாஹ வாராணாம் என்கிற சிந்தாமணி வ்யாக்யானத்தோடு எப்படி மிகவும் பொருந்தும்? கேஶ என்கிறபதம் கபாதி வ்யாவர்த்தகமென்னில் அப்போது லக்ஷணதோஷம் ப்ரஸங்கிக்கும் காகேப்யோ ததி ரக்ஷ்யதாம் - என்கிற இடத்தில் காகபதம் பூனைமுதலானதுகளுக்கும் உபலக்ஷணம் என்றால் காகபதம் வியாக்யான அஜஹத்ஸ்வார்த்தலக்ஷணிகம் என்றல்லவோ சாஸ்த்ரஜ்ஞர்கள் அர்த்தம் எழுதி இருப்பது. இப்படியானால் பாடகல்பனம், லக்ஷணகல்பனம் என்கிற இரண்டுதோஷமும் ஏற்படுமன்றோ. இந்த பாடத்தில் லக்ஷணாதிகள் ஸஹ்யங்களென்னில் கோசகதமான இதர பாடங்களில் லக்ஷணை முதலானதை தோஷமாகச் சொன்னது பொருந்துமோ?

இது எப்படியாவது இருக்கட்டும் ஶ்ருதீநாம் என்கிற இடத்தில் ஷஷ்டிக்கு அர்த்தமென்ன? அது எவ்விடத்தில் அந்வயிக்கிறது? என்கிற விஷயத்தில் தான் அடியேனுக்கு முக்கியமான ஸம்சயம். இந்த ஸ்வாமி ஸாந்த்ராசாரியர் ஸ்வாமி பாடத்திற்கு அஸ்வாரஸ்யம் சொல்லும்பொ

ழுது. 256 ம் பக்கத்தில் 'ஸோகவச என்கிற ஸூத்திரத்திலும் யதா ஸோகே இதராதியான ஸ்ரீபாஷ்யாதிகளிலும் இந்த ஸூத்திரத்தில் குறிக்கப்பட்ட ராஜஹஸ்த்யாதிசார்யம் லோகஸித்தமென்று ஸ்பஷ்டமாய் அருளிச்செய்திருப்பதினால் அதைவிட்டுவிட்டு இதை வேத தாத்பர்ய ஸித்தமென்று சொல்வதும் அவ்வளவு ஸ்வாரஸ்யமானதல்ல' என்று எழுதி இருப்பதால், ச்ருதீநாம் என்கிறவிடத்தில் ஷஷ்டீபூர்வத்திற்கு ஸம்ப்ரதாயாதி நீதியில் அந்வயம் சொல்வதில் இந்த ஸ்வாமிக்குத் திருவுள்ளமில்லை என்று ஏற்படுகிறது. இந்த ஸ்வாமியின் சிந்தாமணி மொழிபெயர்ப்பில் 'பிருஹ்மா ருத்திரன் முதலியவர்களின் பரம்பரையைச் சொல்லுகிற ச்ருதிகளுக்கு ராஜா அவனுடைய ஸேவகன் இவர்களுடைய ந்யாயத்தினால் ஸமமாய் இருக்கை, வ்யத்யாஸமுடையவர்களாய் இருக்கை, இவைகளைக் கண்டறிந்து' என்று எழுதி இருப்பதால் இந்த ஸ்வாமிக்கு ச்ருதீநாம் என்கிறவிடத்தில் ஷஷ்டீபூர்வத்திற்கு ஸாம்யவைஷம்யங்களில் அந்வயம் சொல்வதிலும் இஷ்டமில்லைப்போல் தோன்றுகிறது. அது இஷ்டமானால் ஸாம்யம் வைஷம்யம் வ த்ருஷ்ட்வா - என்கிற சிந்தாமணிக்கு 'ஸமமாய் இருக்கை வ்யத்யாஸமாய் இருக்கை, என்று யதாச்ருதமாக மொழிபெயர்க்காமல் 'வ்யத்யாஸமுடையவர்களாய் இருக்கை' என்று ப்ருஹ்ம ருத்ராதிகதமான வ்யத்யாஸத்தைவிட்டு மொழிபெயர்த்திருக்கமாட்டாரன்றோ? ஆகையால் ஷஷ்டிக்கு இன்னதுதான் அர்த்தமென்றும், அது எவ்விடத்தில் தான் அன்வயிக்கிறதென்றும் இந்தஸ்வாமியின் க்ரந்தத்தால் நிஷ்கர்ஷம் ஏற்படவில்லை. இதற்கு பூர்வபக்ஷி அடையவேண்டிய ஸம்வேதாயத்தத்தில் அந்வயம் சொல்வது மிகவும் பொருந்தாது என்பது எல்லோருக்கும் ஸ்பஷ்டம். ஆகையால் அடியேனுடைய ஸம்சயங்கள் தீரும்படி சேட்லூர் ஸ்வாமி ஒரு நிஷ்க்ருஷ்டார்த்தத்தை புரட்டாசிமீ த்திய தீபிகையில் அருளிச்செய்தால் அதன்மேல் கௌஸஹதமான பாடத்தை அநுஸரித்து அடியேனுக்கு உபதிஷ்டமான அர்த்தத்தையும் விஜ்ஞாபிக்கிறேன்.

## ஸமாதானம்.

(ஸ்ரீ. உ.ப. வே. சே. நரஸிம்ஹமாசார்யர்)

இந்த ஸ்வாமி எழுதிய கடிதத்தில் 'கௌஸஹாஜாஃ' என்கிற பாடத்திற்கு லக்ஷணை என்கிற தோஷமும், பாட கல்பனம் என்கிற தோஷமும் இருப்பதாக ஸ்வாமியின் திருவுள்ளமிருப்பதுபோல் தோன்றுகிறது. இந்த விஷயத்தில் எல்லாம் தெரிந்த பண்டிதர்களுக்கு புதிதாய்ச் சொல்ல வேண்டியது ஒன்றுமில்லை. ஆனபோதிலும் முன் விஜ்ஞாபித்துக்கொண்டிருக்கும் விஷயத்தையே விஸ்தாரமாக எழுதலாமென்று நினைக்கிறேன்.



அதாவது அதிகரணஸாராவளிச்லோகத்தின் பாடம் எப்படி இருக்கக்கூடுமென்று விசாரித்துக்கொண்டிருக்கும் தசையில் சிந்தாமணியை அநுஸரித்து இப்படி இருக்கக்கூடுமென்று ஊஹித்துச்சொன்ன பாடத்தை கல்பிதம் என்று எப்படி நிச்சயமாய் சொல்லமுடியும்? அப்படியாகில் 'கௌஸஹாஜம் ஸ்ருதீநாம்' என்று அச்சிட்ட புஸ்தகத்திலிருக்கும் பாடத்தை வைத்துக்கொண்டு 'கோஸஹாஜா, கௌஸஹாஜம்' என்கிற பாடங்களும் கல்பிதம் என்று சொல்லக்கூடுமன்றோ? 'கோஸஹாஜம்' என்றும் புஸ்தகத்திலிருக்கும் பாடத்தை வைத்துக்கொண்டு சிந்தாமணிக்கு அநுகுணமாக அஸ்வரஸமில்லாமல் அர்த்தம் சொல்லுகிறவரையில் இதைக் கல்பிதமென்று எப்படி தீர்மானிக்கக்கூடும்? நம்மைவிட பூர்விகரான சிந்தாமணி வ்யாக்யாதாவின் அபிப்பிராயத்தை அநுஸரித்தன்றோ இந்தப்பாடமிருக்கக்கூடுமென்று நாம் தீர்மானிக்கவேண்டும். அநேக பாடங்களைப்பற்றி ஸந்தேஹமிருந்தால் பூர்வர்களின் வ்யாக்யானங்களை அநுஸரித்த பாடத்தை தீர்மானிப்பது ந்யாயமன்றோ! ஆகையினால் புஸ்தகங்களிலிருக்கும் பாடங்களை வைத்துக்கொண்டு ஸ்வாரஸ்யமாய் சிந்தாமணியை அநுஸரிக்கக்கூடுமானால் அப்படிப்பட்ட பாடத்தையும் அர்த்தத்தையும் தெறிவித்து, இதைக் கல்பிதம் என்று சொல்வதுதான் உசிதமென்று தோன்றுகிறது. அதுவரையில் தம்முடைய உத்ப்ரேக்ஷாகல்பிதமென்றும் கல்பிதபாடமென்றும் இந்த ஸ்வாமி ஸாதித்திருப்பது எவ்விதத்தில் ஸங்கதமாகும்?

மேலும் லக்ஷணை என்னும் ஒரு தோஷம் நிரூபித்திருக்கிறார். அதில் கௌ என்னும் பதம் ப்ருஹ்மாவையும் ருத்ரனையும் சொன்னபோதிலும் இது மற்ற அதிகாரிகளுக்கும் உபலக்ஷணம் என்று வைத்துக்கொண்டு ஆதி பதம் அருளிச்செய்திருக்கலாம். ப்ருஹ்ம ருத்ராதிகளைச் சொல்லுகிற என்னும் பதத்தினால் ப்ருஹ்ம ருத்ராதிகளின் உத்பத்தி விநாசங்கள், அவர்களின் ப்ரபாவங்கள் எல்லாம் ப்ருஹ்ம ருத்ரர்களைச் சொல்லுகிறச்ருதிகளெல்லாம் சொல்லப்படலாமே. ஸ்ரீமத்ராமாயணம், ஸ்ரீராமனுடைய குணங்கள் ஸ்வாபவங்கள் சரித்ரங்களைச் சொன்னபோதிலும், ராமனைப்பற்றிச் சொல்லுகிறது என்பதற்கு விரோதமில்லையல்லவா? ச்ருதியிலும் ஸத்யத்வம் 'ஜ்ஞாத்ருத்வம் முதலியதைச்சொல்லுகிற 'ஸத்யம் ஜ்ஞானம்' என்கிற வாக்யம் ஸத்யத்வம் முதலிய ஸ்வரூபநிரூபக தர்மங்களை நிரூபித்தபோதிலும் அதின் முன் வாக்யமாகிய 'த்வெஷாஸ்ரூதா' என்கிற வாக்யத்தினால் ப்ருஹ்மத்தைப்பற்றிச் சொல்லுகிறதாகச் சொல்லப்படவில்லையா?

ப்ரவாஹமாவது இவ்விடத்தில் அழிந்ததோடு ஸஜாதீயமான அவஸ்தை மேல் முழுக்கவருகையாலே ப்ரவாஹநித்யங்கள் என்கிறது என்று ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரத்தில் தத்வத்ரயசிந்தனுதிகாரத்தில் அருளிச்செய்யப்பட்டிருப்பதினுல், ப்ருஹ்ம ருத்ராதிகள் ஒவ்வொரு கல்பத்திலும் நசித்து மறுபடி உண்டாகிருர்கள் என்பதுதான். அப்படிச் சொல்லுகிற ச்ருதியும் அவர்களேப்பற்றிச் சொல்லுகிறது என்பதற்கு என்ன விரோதமிருக்கிறது? அன்றிக்கே மைஸுர் பண்டித ரத்னம் மஹாமஹோபாத்யாயர் ஸ்ரீ. உப. வே. லக்ஷ்மீபுரம் ஸ்ரீநிவாஸாசார்யஸ்வாமி மைஸுர் ஒரியண்டல் லைப்ரரி 449, 3756, நீ. உள்ள வ்யாக்யான புஸ்தகங்களில் 'ப்ரஹ்மாத்ருத்ராதி ஸ்வபாவ வராணாம்' என்று பாடம் காணப்படுகிறது என்று தெரிவித்திருக்கிருர். திருக்குடந்தையில் அச்சிடப்பட்டிருக்கும் புஸ்தகத்திலும் இந்த பாடமிருக்கிறது. அதுவும் உசிதமாக இருக்கலாம். ஏனெனில் சிந்தாமணியில் 'தஸ்ய ஸ்வாபாவிகைச்வ ஸர்வஜ்ஞத்வாதிகம் ஸமவதம், ஸமவஸ்வாத ஷேவ ஸ்வாயிகாராத் ஸதத்வாதயத் ஸ்வகர்மாநுரூபம் ஸோபம உபஸம்ஜதே' என்று, இதை விவரித்திருக்குமிடத்தில் அருளிச்செய்யப்பட்டிருக்கிறது. அதாவது ப்ருஹ்மாதிகளுக்கு சில ப்ரபாவங்களிருந்தபோதிலும் அவைகள் அவரவர்கள் கர்மங்களுக்குத் தக்கபடி பகவானுடைய அனுக்ரஹத்தினுல் கிடைத்தவைகள் என்றும் பகவானுக்கு உள்ள ப்ரபாவங்கள் ஸ்வதஸ் ஸித்தமென்றும் அவ்விடத்தில் நிரூபிக்கப்பட்டிருக்கிறதற்கு அநுகுணமாக இருக்கிறபடியினுல்.

அப்படி லக்ஷணை ஒப்புக்கொண்டபோதிலும் சிந்தாமணி வ்யாக்யானத்தைக் கொஞ்சமேனும் அநுஸரிக்காத பாடங்களேக்காட்டிலும் இது உசிதம் என்பதற்கு ஸந்தேஹமில்லை. மேலும் அந்தப் பாடத்தில் லக்ஷித லக்ஷணை என்னும் தோஷம் அடியேனுல் விஜ்ஞாபிக்கப்பட்டிருக்கிறது. இது வெறும் லக்ஷணை. 'க்ரோஸஹஜம்' என்கிற பாடத்திலும் அத்யாஹாரதோஷம் வருகிறதென்று முன் மாஸத்திய வேதாந்ததீபிகையின் 257-வது பக்கத்தில் நிரூபித்திருக்கிறேன். 'ஸஹஜம்' என்பது அஸ்வரஸமாக இருக்கிறது என்பதும் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. அத்யாஹாரத்தைவிட லக்ஷணை மிகவும் லகுவானது என்பது எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது.

இதற்குமேல் இந்த ஸ்வாமி இது எப்படியாவது இருக்கட்டும் என்றும் நிரூபித்தவைகளே அநாதரித்துவிட்டு தமக்கு 'ப்ருதீநாம்' என்னும்



பதத்திலிருக்கும் ஷஷ்டி எங்கே அன்வயிக்கிறது என்பதுதான் முக்யமான ஸந்தேஹம் என்று அருளிச்செய்திருக்கிருர். சிந்தாமணி வாக்யத்தில் எங்கே அந்வயமிருப்பதாக ஸ்வாமி முதலான பண்டிதர்களுக்கு திருவுள்ளமாகிறதோ அதுதான் அடியேனுக்கு ஸம்மதம். அதில் 'வ்யத்யாஸமுடையவர்களாக இருக்கை' என்று சிந்தாமணி வாக்யத்தை மொழிபெயர்த்திருப்பது ஸ்வாமி திருவுள்ளத்தில் பாதகமாகப்பட்டதாகத் தெரியவருகிறது. அந்த விஷயத்தில் என்னுடையவோ மற்றவர்களுடையவோ அநவதானம் தான் காரணம் என்பதை மாத்ரம் நான் இப்போது நிரூபிக்கிறேன். எப்படியெனில் ஸாம்யம் வைஷம்யம் இரண்டும் ப்ருஹ்ம ருத்ரகதமாக அடியேன் அபிப்பிராயப்பட்டதுபோல் ஸ்வாமி திருவுள்ளம் பற்றியிருக்கிருர். அப்படி எனக்கு அபிப்ராயமாக இருந்தால் 'ஸமராய் இருக்கை' 'வ்யத்யாஸமுடையவர்களாக இருக்கை' என்றல்லவோ மொழிபெயர்க்கவேண்டும். அப்படிக்கில்லாமல் ஸமமாயிருக்கை என்று ச்ருதிகதமான ஸாம்யத்தைச் சொல்வதுபோல் எழுதின பிறகு வ்யத்யாஸமுடையதாயிருக்கை என்று எழுதியிருப்பதை அச்சுப்போடும்பொழுது 'உடையவர்களாயிருக்கை' என்று திருத்தி அது அநவதானத்தினுல் ப்ரூப் பார்க்கும்போது விடப்பட்டிருக்கலாம். ஆகையினுல் அந்த அநவதானத்தை ஸ்வாமி க்ஷமித்து ச்ருதீநாம் என்கிற ஷஷ்டிக்கு சிந்தாமணி வாக்யத்தின்படி எவ்விடத்தில் ஸ்வரஸமாக அந்வயமிருப்பதாக ஏற்படுகிறதோ அவ்விடம் அந்வயம் உண்டென்று வைத்துக்கொள்ளவேண்டியது.

ஆகையினுல் இப்பொழுது ஸ்வாமி கடைசியாக கோசகதமான பாடத்தை அநுஸரித்தும், தமக்கு உபதிஷ்டமான அர்த்தத்தை நிரூபிப்பதாக ஸாதித்திருப்பதை அநுஸரித்தும், அடியேனுடைய ப்ரார்த்தனையை அங்கீகரித்தும், சிந்தாமணி வாக்யத்தை அநுஸரித்ததாயும் லக்ஷித லக்ஷணை அத்யாஹாரம் முதலிய தோஷங்களில்லாமலும் இருக்கும் அர்த்தத்தைத்தெரிவித்து அடியேங்களுடைய ஸம்சயத்தை நிவர்த்திக்க வேணுமாய் ப்ரார்த்திக்கிறேன்,

3

**ஸ்ரீமான் வேதாந்ததீபிகை பத்ராதிபர் ஸ்வாமி ஸன்னிதிக்கு—**

**இந்த குரோதனஸு வைகாசியீ'த்தில் ஸ்ரீபேரருளாளனுக்கு ப்ரஹ்மோத்ஸவம் நடந்த ஸமயத்தில் ஹானரபில் சென்னை ஹைகோர்ட்டு ஜட்ஜ் ஸ்ரீ. உ. வே. வான்பாக்கம் வேங்கடம் ஸ்ரீநிவாஸய்யங்கார் ஸ்வாமி பண்டிதர்களே ஒருங்கு சேர்த்து நாலு ஐந்துநாள் சாஸ்திரார்த்த விசாரம்நடக்கும்படி செய்தருளி பண்டிதர்களுக்கு ஸம்பாவனையும் ஸமர்ப்பித்தருளினுர்.**

186753-

அதில் முதல்நாள் அதிகரணஸாராவளியில் ஒரு ச்லோகத்தில் ஒரு பதத்திற்குப்பாடம் எதுஎன்பதைப்பற்றியும் அதன் வ்யாக்யானமான அதிகரண சிந்தாமணியில் சில வாக்யங்களின் தாத்பர்யத்தைப்பற்றியும் ஆசங்கை உத்பாவிக்கப்பட்டது. அந்த ஸபையில் ஒருவிதமான முடிவு ஏற்படாமல் அவரவர்கள் திருவுள்ளம்போல் அருளிச்செய்து விட்டார்கள்

வேதாந்ததீபிகையின் நாளது ஆடிமீ்த்திய ஸஞ்சிகையில் அவ்விஷயம் விசாரிக்கப்பட்டு ஒருவாறு நிச்சயம் செய்யப்பட்டிருக்கிறது அதாவது போக்த்ராபத்தி அதிகரணத்திற்கான 'ஸாகே யஸ்யாஸ்ரவந்தி தைவதம்' என்கிற ச்லோகத்தில் 'கேஶாஹ்லாதாம் ப்ரவ்ருத்தீநாம்' என்று பாடம் நிச்சயிக்கப்பட்டு 'க' என்று ப்ரும்மாவும் 'ஈச' என்று ருத்ரனும் சொல்லப்படுவதாகவும், ப்ரும்மாருத்ரன் முதலிய ப்ரவாஹத்தைச் சொல்லும் ச்ருதிக்கு என்று அர்த்தம் ஆவதாகவும் விவரிக்கப்பட்டிருக்கிறது 'முதலிய' 'ப்ரவாஹம்' இந்தப் பதங்கள் எதன் அர்த்தம்? மேல் 'ப்ருத்யாதி' என்கிற ஆதிபதம் எங்கே அந்வயம்? பண்டிதர்களைப்போல் ஸாமான்ய ஜனங்களும் அறிந்து கொள்ளும்படி அந்த ச்லோகத்திற்கும் சிந்தாமணிக்கும் மனோஹரமான விவரணம் எழுதி வெளியிடவேண்டுமென்று பண்டித ஸ்வாமிகளைப் பிரார்த்திக்கிறேன்.

ஓர் ஜிஜ்ஞாஸு.

---

குறிப்பு:— இதற்கு ஸமாதானம் இதன் விஷயமான முதல் கடிதத்திற்கு எழுதப் பட்டதே போதுமாதலால் ப்ரத்யேகமாய் எழுதப்படவில்லை. [ப—ர்.]

4

## ஸந்தேஹத்தின் மேல் ஸந்தேஹம்.

(ஸ்ரீ. உப. வே. ஸ்ரீசைல தாதாசார்யர்.)

வேதாந்த தீபிகையின் சென்ற ஆடிமீ்த்திய ஸஞ்சிகையில் "திருமங்கைமன்னன் திருநறையூர் எம்பெருமான் விஷயத்திலும் நம்மாழ்வார் திருத்தொலைவில்லிமங்கலத் தெம்பெருமான் விஷயத்திலும் பக்திவிஞ்சி தானென தன்மையை மறந்து நாயிகாபாவத்தை அடைந்து மடலூர ஆரம்பிக்கும்படி ஈடுபட்டார்கள். அப்படி ஸ்ரீதேசிகன் பேரருளாளனிடத்தில் ஈடுபட்டதற்கு ப்ரமாணமுண்டா?" என்று ஸ்ரீ. உப வே. சேட்டலூர் ஸ்வாமி ஒரு ஸந்தேஹம் உத்பாவித்திருக்கிறார்.



"ஸதீவத் ப்ரியமக்ருத்ரிமம்" அன்பு முதிர்ந்த கணவனைப் பதிவ்ரதையான பெண்மணிபோல எம்பெருமானை பக்தன் உபாஸனம் செய்யக்கடவன் என்கிற பகவச் சாஸ்த்ரமுறையில் ஆழ்வார்களின் அந்யாபதேசப் பாசுரங்களுக்குத் தாத்பர்யம் ப்ரதிபாதிக்கப்பட்டிருக்கிறது. வியோகம் நேராத போது இரங்கவேண்டுமோ? கிட்டிய நுபவிப்பவர்கள் மடலெடுக்க வேண்டியதென்ன?

பெருமாள் திறத்தில் பிராட்டியின் ஈடுபாட்டை ஒத்த ஈடுபாடுகள் நாயிகாபாவத்திலே ஆகாதோ?

'பத்மபத்ரவிஶாலாக்ஷம் ஸிம்ஹவிக்ராந்தகாமிநம் । தந்யா: பஶ்யந்தி மே நாதம் க்ருதஜ்ஞம் ப்ரியவாதிநம் ॥ (தாமரை மலர்போன்ற திருக்கண்களும் தாமரை இலைபோன்ற திருவுடம்பும் சிங்கம்போன்ற வீரப்பாடுடைய நடையழகும் நன்றியறிதலும் இன்சொல் மொழிதலுமுடைய எனது நாதனை பாக்கியாதிகாரனர் கண்ணாரக்காண்பார்கள்). என்று பிராட்டியருளிச்செய்த பாசுரத்தின் அடைவிலே ஸ்ரீதேசிகன்,—

"வரத தவ விலோகயந்தி தந்யா: மரகதபூதர மாத்ருகாயமாணம் ।
வ்யபகத பரிகர்ம வாரவாணம் ம்ருகமதபங்க விஶேஷ நீலமங்கம் ॥"

(வரந்தரும் பெருமானே! கரியமாணிக்க மலைக்கு உபாதான த்ரவ்யமென்னலாம்படி ஒப்பனையும் கவசமுமில்லாமே கஸ்தூரிக்குழம்புபோலே கருநீலமாய் பிரகாசிக்கும் தேவரீருடைய திருமேனியை பாக்யாதிகாரனர் ஸேவிக்கப்பெறுவார்கள்) என்று அருளிச்செய்தது பிரமாணமாகப் போதாதோ? ஸ்வாமிகள் திருவுள்ளம் பற்றவேண்டும்

## ஸந்தேஹத்வய நிவ்ருத்தி.

(ஸ்ரீ. உப. வே. பண்டிதபூஷணம், சேட்டலூர் நரஸிம்மாசார்யர்.)

'ஸதீவத் ப்ரியமக்ருத்ரிமம்' அன்பு முதிர்ந்த கணவனை பதிவ்ரதையான பெண்மணிபோல எம்பெருமானை பக்தன் உபாஸனம் செய்யக்கடவன்' இத்யாதி எழுதப்பட்டிருக்கிறது. அதில் அன்பு முதிர்ந்த கணவன் என்ற தர்ஜத்துக்கு தன்னிடத்தில் மிகவும் ப்ரீதியையுடைய பர்த்தா என்று பொருளாகும். 'ஸதீவத் ப்ரியமக்ருத்ரிமம்' என்பதற்கு தன்னுடைய ப்ரீதிக்கு விஷயமாகிய பர்த்தா என்று அர்த்தமாகிறது. மேலும் உபாஸனம் செய்யக்கடவன் என்று எழுதப்பட்டிருக்கிறது. இந்த வசனத்தை எடுத்து ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரம் உத்தர க்ருத்யாதிகாரத்தில் 'அவ்வோ

ஸம்பந்தவர்க பரத்வ ஸௌலப்யாதிகளுக்கு அநுரூபமான வ்ருத்தியைப் பண்ணவும்' என்று அர்த்தம் ஸ்ரீதேசிகனால் அருளிச்செய்யப்பட்டிருக்கிறது. அது ப்ரபன்னன் ப்ரபத்திக்குப் பிறகு செய்யும் பகவதாராதனம் செய்யும் விதத்தை நிரூபிக்கிறது என்பது மேல் கீழ் வாக்யங்களால் ஸ்பஷ்டமாகிறது. அன்றிக்கே இதன் மேல் வாக்யமாகிய 'ஐநநீவஜூநஸயம்' என்பதின் அர்த்தத்தை 'மருவு நன்மகனென' என்று ஆராதன ஸ்ரீவைஷ்ணவதிநசரியில் இஜ்யையை நிரூபிக்கும் ப்ரகரணத்தில் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் அது ஆழ்வார்களினுடைய அநுபவத்துக்கு ப்ரமாணமாகாது.

'வியோகம் நேராதபோது இரங்கவேண்டுமோ? கிட்டியனுபவிப்பவர்கள் மடலெடுக்க வேண்டியதென்ன?' என்று எழுதப்பட்டிருக்கிறது. இந்த வசன சைலியைப்பார்த்தால் ஸ்ரீதேசிகன் பேரருளாளனையே எப்போதும் கிட்டி அநுபவித்தாராதலால் ஸ்ரீதேசிகனுக்கு அவருடன் விச்லேஷமுமில்லை மடலெடுக்கவேண்டியதுமில்லை என்று ஸமாதானம் இவர் திருவுள்ளத்திலிருப்பதுபோல் தோன்றுகிறது. அப்படியாகில் அடுத்த வாக்யத்தில் அசோகவநிகையிலிருக்கும் பிராட்டியின் 'யஜ்ஞா: வஶ்யந்தி ரெ நாயம்' என்று அநுஸந்தித்திருப்பதைப்போல, 'தவவி ரொகயஜிய ந்யா:' என்று பேரருளாளன் விஷயத்தில் ஸ்ரீதேசிகனும் அநுஸந்தித்திருக்கிறார் என்று ஸமாதானம் சொல்லியிருப்பது எப்படி ஸங்கதமாகும்?

அப்படியாகிலும் அந்த அநுஸந்தானம் நாயிகாபாவத்தாலே உண்டானது என்பதற்கு ப்ரமாணமாகாது. ஏனெனில் அப்படிப்பட்ட அநுஸந்தானம் நாயகிக்கு மாத்திரம் தான் என்கிற நிர்பந்தம் இல்லை, நாயிகாபாவத்தை அடையாத இதரர்களும் அப்படி அனுபவித்திருக்கிறார்களாகையினால். ஸ்ரீமத்ராமாயணம் அயோத்யாகாண்டம் 64வது ஸர்கத்தில்,

நதெ ரநாஷ்யா தெவாஜெயெ வாாா ஶாஹகண்ஜை।
ரவம் ஜீக்ஷ்ணி ஈாரவஸ்ய வஷெ உணுடிமெ வநரீ ।
வதுவக்ஷணம் ஸஹ்ய ஸஷெஷ வாாநாவிகம் ।
யந்யா ஜீக்ஷ்ணி ஈாரவஸ்ய தாாாயிவதிஶம் ரவழ ॥
வக்ருஶம் ஶாாடிவெஸ்யநொ: ஷஜூஸ்ய கரிஜஸ்ய ௨ ।
ஸஹமயி ரர நாயஸ்ய யநொம் ஜீக்ஷ்ணிதநூவழ ।
திவூத வநவாஸம்தம் கயொயூம் வநாாமதழ ।
ஜீக்ஷ்ணி ஸவிநொ ஈாரெ ஶகும் ராழமதம் யஶா ॥



இத்யாதி வசனங்களினால் பிதா புத்ரனைப்பற்றியும், அப்படி அனுஸந்தானம் செய்திருக்கிறார் என்று ஏற்படுகிறது.

ஆனால் அப்படி நாயிகாபாவத்தால் அனுபவிப்பதுதான் விசேஷமென்பது எப்படிச்சொல்லமுடியும் என்கிற ஒரு ஆக்ஷேபம் சொல்லலாம். அதில் ஸ்ரீதாத்பர்ய ரத்நாவளியில் 'ஹக்ஷிஶ்ஞமாா வூத்யா வரிணரதி ர ஹெநஃ ஸாவஸ்ஸ வூயிஷ்ர' என்று பாவபந்தத்தினுடைய வூயிஶவினால் என்று அருளிச்செய்யப்பட்டிருக்கிறது. வூயிஶவாவது அதிகமாக இருக்கை அதாவது விபுலமாக இருக்கை. அப்படியே ஸ்ரீவேங்கடாசார்யரால் ஆழ்வாருடைய அநுராகாதிசயத்தாலே பக்தி தானே ச்ருங்கார வ்யாபாரமாகப் பரிணமியாநிற்கிறது என்று வ்யாக்யானம் செய்யப்பட்டிருக்கிறது. பகவானுடைய ஸௌந்தர்யாதிசயத்தை ஸ்துதிக்குமிடத்தில்,

ஸகீஸவஷ்ரீய தெைாவிரநயாநாம் யதூாணி ஸிஸ வூஷதா
நக்ருதிநபுஶக்யா 12 ஷீதம் யடிவகிம் யஜிதொவி நமநம் ஷ்ரூஸாவதெவ
ரநஸா ஜிஸாாம் ஸஹவஃ ॥

என்று ஸ்ரீதேசிகனே ஸ்ரீயாதவாப்யுதயத்தில் அருளிச்செய்திருக்கிறபடியினாலே இப்படிப்பட்ட யோகிகளையும் ஸ்த்ரீ பாவத்தை அடையும்படி செய்த ஸௌந்தர்யாதிசயம் எம்பெருமானுக்கு இருக்கிறது என்ற அதிசயம், இப்படி நாயிகா பாவத்தினால் அனுபவித்த இடங்களில் த்யோதிதமாகிறதென்று வ்யக்தமாக ஏற்படுகிறது. இப்படியே திருவாய்மொழி இரண்டாவதுபத்தில் எம்பெருமானுடைய போக்யதாப்ரகர்ஷத்தை நிரூபிக்க உபக்ரமித்து 'வாயும் திரை' என்னும் முதல் திருவாய்மொழியில் நாயிகாபாவத்தினாலே அவனை அனுபவித்தார். அதினால் அதிக்லேசக்ஷணவிரஹத்வம் என்கிற பகவத்குணம் ப்ரதிபாதிதமாகிறதென்று தாத்பர்ய ரத்னவளியில் ஸ்ரீதேசிகனாலேயே 'ஷிதிமெதிக்லெஶக்ஷணவிரஹம்' என்று ஸங்க்ரஹிக்கப்பட்டிருக்கிறது. இப்படியே 'கங்குலும் பகலும்' என்னும் திருவாய்மொழியின் அவதாரிகையில் 2:-ஆயிரப்படியில் ஸ்ரீரங்கநாதனுக்கு மற்ற திவ்ய தேசத்து எம்பெருமான்களைவிட விசேஷம் அருளிச்செய்யப்பட்டிருக்கும் விசேஷம் அநுஸந்திக்கத்தக்கது. இப்படியே நாயிகாபாவமாக அனுபவித்த மற்ற இடங்களிலும் அதற்கு முன்பு அனுபவித்த அனுபவத்தினால் உண்டான ப்ரீதி அதிகமாய் பாஹ்ய ஸம்ச்லேஷாபேக்ஷயை உண்டாக்க அது கிடைக்காமையாலே தூதப்ரேஷணாதிகளைச் செய்திருக்கிறார் என்று அவதாரிகை எங்கும் அருளிச்செய்திருப்பதினால் ப்ரீத்யதிசயம் உண்டென்பது ஸித்தம். இவையெல்லாவற்றையும் திருவுள்ளத்தில் வைத்துக்கொண்டு கோதாஸ்துதியில்,

'ஸாகேதம் தவ விபவஃமும் ஸவதீவ ஸாகெ
ஸக்தம் நிஜாம் வ்ருணுயஹா வஹயா ஹ்ருணுஹ ।
உத்வா வஃவெஃ விரஹ ஸம்ஹலெஜொ ஷிடெஹஃ ।
ஸ்ரும்ஹாரயதி ஹ்ருதயம் ஹாஸவத்ஸீயாஃ ॥'

என்று ஆண்டாளைப்போல அநுராகாதிசயத்துடன் எம்பெருமானை அநுபவிக்கவேண்டுமென்று கொண்டு ஆழ்வார்கள் நாயிகபாவத்தை அடைந்தார்களென்று ஸ்ரீதேசிகன் அருளிச்செய்திருக்கிறார். இவை முதலிய ஸ்ரீஸூக்திகளையும் ஸம்ப்ரதாயங்களையும் அநுஸரித்துப்பார்த்தால் ரஸாதிசயமும் அநுராகாதிசயமும் நாயிகாபாவமாக அனுபவித்த இடங்களில் உண்டென்பது நிராகரிக்கமுடியாது. மேலும்,

'வாணுஸ்த்ராஃ உஷவத்ராக்ஷ்யாஃ ஸ்வாயத்ராஃ ஜவநம் வநம் ।
யாஷ்ட்ரியோ த்ருஷ்டவத்யூஸாஃ வம்ஹாலம் ஓநலாயயாஃ ॥'

என்று த்ரௌபதியின் அவயவசோபையை ஸ்துதிக்கவந்த ப்ரகரணமேயன்றி அவளுடைய அவயவசோபையை நிந்திக்கவந்த இடமல்ல. அதை அதிதேசித்து 'வாணுஸ்ரீ ராத்ரு ஸௌவஸஹ்ய ஸாஷ்டயவம் வஹ்ரூ வம் ஸாவநீத்யா' என்று அருளிச்செய்யப்பட்டிருக்கிறது. அதுவும் ஸௌந்தர்யாதிசயத்தினால் என்பதை 'ராத்ருஸௌஸா' என்னும் பதத்தால் ஸூசிப்பித்திருக்கிறார். ஆக இவைகளையெல்லாம் ஸம்ப்ரதாய அபிஜ்ஞரான ஸ்வாமி திருவுள்ளம் பற்றவேண்டியது. அப்படி நாயிகாபாவமாக திருமங்கை ஆழ்வார்கள் முதலியவர்கள் அனுபவிக்காத தேவநாதன் முதலிய எம்பெருமான்கள் கவிழ்தலை இட்டிருக்கவேண்டாவோ என்று எழுதி இருக்கிறார். இது உண்மையே. ஆகிலும் அப்படி ஒரு ஆழ்வார்களாலும் மங்களாசாஸனம் பண்ணப்பெறாத திவ்யதேசத்து எம்பெருமான்கள் முன்பும் அப்படி நாயிகாபாவத்தால் மங்களாஸாசநம் செய்யப்பெறாத எம்பெருமான்கள் முன்பும் நம்மடியவர்க்கு மெய்யன் செருக்கடித்துத்திரிய அமையும். மேலும் ஆழ்வார்கள் அப்படி அனுபவிக்காத குறைதீர நம் தேசிகனுடைய நாயிகாபாவமாக அனுபவித்த அனுபவம் அஸாதாரணமாய் அமைந்திருப்பது இவ்விடத்தில் யோசிக்கத்தக்கது. திருமங்கை ஆழ்வார் திருநறையூரிலும், ஆழ்வார் திருத்தொலைவில்லிமங்கலத்திலும் என்று திருமங்கை ஆழ்வாரும் நம்மாழ்வாரும் நாயிகாபாவமாக அனுபவித்த ஸ்தலங்களையே அவர்கள் விசேஷித்து ஈடுபட்ட ஸ்தலங்களாக இந்த ஸந்தேகத்திற்குக் காரணமான வ்யாஸம் எழுதினவராலேயே எடுத்திருப்பதும் இவ்விடத்தில் கவனிக்கவேண்டியது.



ஒழியே போய்க்கொண்டிராதபடியாக என்றபடி, 'நிஜ்ஜதோ நநுஸவாண வாஹஃ' என்னப்பட்டதிறே, வெந்தது - (அஸ்வத்தாமாவினால் ப்ரயோகம் செய்யப்பட்ட அபாண்ட வாஸ்த்ரத்தினால்) தக்தமான (கொளுத்தப்பட்ட), ஒரு, குழவியை - மரிசுவை, நல்-நல்ல, குமாணுக்கும் - குழந்தையாகும்படி செய்த, வெறி-நல்ல வாஸனையுடன்கூடிய, துளவவித்தகனார் - திருத்துழாய் மாலையைத் தரித்துக் கொண்டிருக்கிற ஆஸ்சர்ய பூதனானவனுடைய, விதியே - விதிக்கிற வாக்யத்தை, 'மாமேகம் ஶரணம் வ்ரஜ' (என்னைச் சரணம் அடை), 'மஜ்ஜாபோ' (என்னிடத்தில் பக்திசெய்) என்றிவை முதலியவைகளை என்றபடி, கோண்டார் - அங்கீகரித்தவர்கள், பந்தனமாமிவை - பந்தகங்களான இந்தக் கர்மங்கள், அனைத்தும்-எல்லாவற்றையும், பாறுகைக்கு - தூளியாகச் செய்வதற்கு, பழைமறையின் - பழையதான வேதங்களினுடைய, பரமநெறி - உத்க்ருஷ்டமான பக்தி ப்ரபத்திகளாகிற மார்க்கத்தை, பயிலுவார் - தங்கள் அதிகாரத்திற்குத் தக்கபடி அப்பியிப்பார்கள். 'பதமொன்றே' என்று பாடாந்தரம், அப்பொழுது அநாதியான வேதங்களில் சொல்லப்படுகிற, பதம் - வழியை, ப்ரபத்தி மார்க்கத்தை என்றபடி. அன்றிக்கே 'பழைமறையின் பதம்' என்று அந்வயமாக்கி அநாதியான வேதங்களினால் சொல்லப்படுகிற எம்பெருமானுடைய திருவடிகள் ஒன்றையே என்றபடியாகவுமாம். இந்த யோஜனையில் 'வெந்ததோரு குழவி' இத்யாதியுடன் ஆனுகுண்யம் ஏற்படுகிறது. இவ்விடத்தில் 1 'யோஷித் க்ருதத்ரூஷதஸ்தவோசகட ஹோமதி ஹெவோதிகஹோரதவஸ்ந்யாவலம்ஸநாதி ஸவிகோசணதுரி கஷிதிவ' என்கிற ஸ்ரீபாதுகாஸஹஸ்ர ஶ்லோகத்தை அனுஸந்திக்கவும். 9

திருவஹீந்திரபுரம் சேட்லூர் வித்வான் பகவத் விஷயம் பண்டிதபூஷணம்

ஸ்ரீ உ.ப. வே நரஸிம்மாசார்யர் ஸ்வாமியின்

ஸ்ரீ பரமபதஸோபாந வ்யாக்யானத்தில்

நாலாவது பீதிபர்வம் முற்றிற்று.

1 எம்பெருமான் ஸ்ரீராமாவதாரத்தில் மிதிலைக்கெழுந்தருளும்பொழுது வழியில் கல்லாய்க் கிடந்த அஹல்யையைப் பெண்ணாக்கினதும், கிருஷ்ணாவதாரத்தில் குழந்தையாயிருக்கும்பொழுது தொட்டிலின்மேல் சகட்டில் ஆவேசித்திருந்த ஓர் அசுரனை உதைத்துத் தள்ளினதும், ஆகாசத்தையளந்த திருவடியில் ப்ரும்மா தீர்த்தம் சேர்க்க கங்கையை யுண்டாக்கினதும், அஸ்வத்தாமா ப்ரயோகித்த அபாண்டவாஸ்த்ரத்தினால் உத்தரை வயிற்றில் இருந்தும் கரிக்கட்டையாய் விழுந்ததைப் பரீக்ஷித் என்னும் ஓர் அரசனாக்கினதும்.

॥ ஸ்ரீ: ॥

॥ ஸ்ரீமதே நிகமாந்தமஹாதேசிகாய நம: ॥

॥ அத ப்ரஸாதநபர்வ ॥

கருமாலையில் வரும் கட்டம் கழிக்கும் கருத்துடையார்
ஒருமால் பெருகிய யோகின் முயன்று மதன்றியு நம்
திருமாலடியிணை திண் சரணு மென வரித்தும்
தருமாலினியவை தானே யெனத் தகவெண்ணுவரே. 10

॥ ஸ்ரீ: ॥

॥ ஸ்ரீமதே ஸ்ரீநிவாஸராமாநுஜ மஹாதேசிகாய நம: ॥

## ஐந்தாவது ப்ரஸாதந பர்வம்.

இப்படி ஸம்ஸாரத்தில் பயமுண்டானவர்கள் பகவானுடைய திருவடிகளை ஆச்ரயிப்பார்கள் என்று கீழ் ப்ரஸ்துதமான அர்த்தத்தை இந்தப் பர்வத்தில் விஸ்தாரமாக நிரூபிக்கக் கோலி முதலில் அதை ஸங்க்ரஹித்தருளிச் செய்கிறார்—'கருமாலையில்' என்றாரம்பித்து.

[ப - ம்.] கருமாலையில் - கர்ப்பங்களினுடைய பரம்பரையில், வரும் - உண்டாகிற, அதாவது தடுக்க முடியாமல் உண்டாகிற, கட்டம் - வ்யாதி, ஜரை, மரணம், முதலிய கஷ்டங்களை, கழிக்கும் - நிவ்ருத்தி செய்துகொள்ள வேண்டும் என்கிற, கருத்துடையார் - எண்ணம் உடையவர்கள், ஒரு - ஒப்பற்ற, மால் - ப்ரீதி, நிரதிசயப்ரீதி என்றபடி, பெருகிய - வ்ருத்தி அடைந்து வருகிற, அன்றிக்கே 'ஒரு' என்பதினால் தைலதாரைபோல் இடைவிடாமல் இருப்பது என்பதும், 'மால்' என்பதினால் ப்ரீதிரூபமா யிருப்பது என்பதும், 'பெருகிய' என்பதினால் நாள் செல்லச் செல்ல வளர்ந்து வருவதா யிருப்பதும் அருளிச் செய்யப்பட்டதாகவுமாம், யோகில் - பக்தி யோகத்தில், முயன்றும்- ப்ரயத்னம் செய்தும், அதன்றியும் - அது இல்லாமல் போன போதிலும், அதாவது அது ஜ்ஞானசக்தியுடையவர்களுக்கு ஸாத்யமானதென்பதும், அப்படிப்பட்ட அதிகாரம் இல்லாதவர்களுக்கு மேல் சொல்லப்படுகிற ப்ரபத்தியில் அதிகாரம் என்பதும் நிரூபிக்கப்பட்டதாகிறது, நம் - நம்முடைய, திருமால் - ஸ்ரிய:பதியினுடைய, அடியிணை - திருவடிகள் இரண்டையும், திண் - த்ருடமான, சரணும் - உபாயமாகும், என - என்று, வரித்தும்-ப்ரார்த்தித்தும், ப்ரார்த்தனா பூர்வகப்ரபதநத்தைச் செய்தும் என்றபடி, இனி - இதற்குப் பிறகு, அவை - உபாயத்வேந வரிக்கப்பட்ட அந்தத் திருவடிகளையே, தானே, தரும் - கொடுக்கும், 'ஆல்' என்பது ப்ரீத்யதிசயத்தைக் காட்டுகிறது, என - என்று, தகவு - அந்த எம்பெருமானுடைய க்ருபையை, எண்ணுவர் - தங்களுக்குத் தஞ்சமாக நினைத்துக் கொண்டிருப்பார்கள், அன்றிக்கே அந்த க்ருபை வரும் ஸமயம் என்றைக்கோ என்று எண்ணி இருப்பார்கள், அதாவது சாதகவ்ருத்திகளாய் இருப்பார்கள் என்றபடி. 10



இப்படி வரிவஸ்யையை [illegible] பிறந்தவனுடைய ஸர்வஸாதநஸாத்ய விசேஷங்களுக்கெல்லாம், எருத்துக் கொடி யுடையானும் பிரமனு மிந்திரனும் மற்றுமொருத்தரும் இப்பிறவி யென்னும் நோய்க்கு மருந்தறியாதிருக்க மருந்துவனாய் நின்ற மாமணிவண்ணன் 1 'ஸஜஸ்வ மாம்' என்றும், 2 'மாமேகம் சரணம் வ்ரஜ' என்றும் விதித்த ஔஷதங்களிரண்டில் பக்தியோகம் கர்மயோகாதிகளை முன்னிட்டுக்கொண்டு மேலும் வர்ணாச்ரமாதி தர்மங்களையும்

இனி இந்தப் பர்வத்தில் பக்தி ப்ரபத்திகள் என்கிற உபாயங்களினுடைய ஸ்வரூபங்களையும், அதிகாரங்கள் முதலிய விசேஷங்களையும் விஸ்தாரமாக நிரூபித்தருளுகிறார் - 'இப்படி' என்றாரம்பித்து. 'இப்படி' என்றது கீழ் நாலு பர்வங்களிலும் நிரூபித்திருக்கிறபடியே என்றபடி. எருத்துக்கொடி - வ்ருஷபத்வஜத்தை, உடையானும் - உடையவனாகிய ருத்திரனும், பிரமனும் - ப்ருஹ்மாவும், இந்திரனும், மற்றும் ஒருத்தரும் - வேறு எந்தத் தேவதையும், இப்பிறவி - இந்த ஜன்மம், என்னும் - என்று சொல்லப்படுகிற, நோய்க்கு - வ்யாதிக்கு. இருக்க - இருக்கையாலே என்றபடி. மருந்துவனாய் - வைத்தியனாய், நின்ற - நிற்கிற, மாமணிவண்ணன் - ச்லாக்யமான நீலரத்னம் போன்ற வர்ணத்தையுடைய பகவான் என்றபடி. மாம் - என்னைக் குறித்து, ஸஜஸ்வ - பக்திபண்ணு. மாமேகம் - என்னை ஒருவனையே, சரணம் - சரணமாக, வ்ரஜ - அடை. ஔஷதங்கள் - மருந்துகள், பக்தி ப்ரபத்திகள் என்றபடி. கர்மயோகாதிகளை - ஆதி சப்தம் ஜ்ஞானயோகத்தைச் சொல்லுகிறது, 'முன்னிட்டுக் கொண்டு' என்பதினால் அவைகள் முன் உண்டானால் தான் பின்னால் உண்டாகும் என்பது த்யோதிதம். மேலும் - தான் உண்டான பிறகும், வர்ணாச்ரமாதி தர்மங்களை - இங்கு ஆதி சப்தத்தினால் குலம், தேசம், முதலியது க்ரஹிக்கப்படுகிறது. 'அபேக்ஷித்து' என்பதினால் கோரக அவைகள் காரணம் இல்லாமல் போன போதிலும் பக்தி யோகம் வ்ருத்தி அடைவதற்குக் காரணமான மனதின் சுத்திக்கு விரோதியான ரஜஸ் தமஸ்

1. கீதை-9-23. 2 கீதை - 18-66.

னை யபேக்ஷித்து ஆரம்பத்திலும் அந்தராயாவஸரங்களிலும் ப்ரபத்தியைக் கைதொடுமானமாகக் கொண்டு ப்ரவ்ருத்தமாய், தைலதாரைபோலே அவிச்சிந்நஸ்ம்ருதிஸந்தாநரூபமாய், ஸ்வப்நதீதர்சநாதி சப்தங்களாலே சொல்லும்படியான வெளிச்சிறப்பையுடைத்தாய், ஆஸநாதிபரிகரயுக்தமாய்க் கொண்டு ஏகாக்ரதாநுகுணதேச காலங்களிலே அநுதிநமநுவர்த்திக்க வளர்ந்து வருவதாய், அந்திமப்ரத்யயாந்தமாயிருக்கும். இது 1 'நாநா சப்தாதிபேதாத்' என்கிறபடியே அநேகவிதமாயிருக்கும். இவற்றில் அநந்யப்ரயோஜநனுக்கு பலபேதமில்லாமையாலே யதாருசி விகல்பம். 2 'நாஹ

லாக்களை வ்ருத்தி செய்கிற பாபங்களை நிவ்ருத்தி செய்வதற்காக அவைகள் வேண்டியிருக்கின்றன என்பது த்யோதிதம். ஆரம்பத்திலும் - பக்தியோகத்தை ஆரம்பிக்கும் பொழுதும், அந்தராயாவஸரங்களிலும் - விக்னங்கள் ஏற்படும் காலங்களிலும், கைதோடுமானமாக - கையால் பிடித்துக் கொள்ளப்படும் தடி முதலியவையாக, ஹஸ்தாவலம்பனம்பமாக என்றபடி. அதாவது பக்தியோகத்திற்கு அவச்யம் அபேக்ஷிதங்களான தர்மங்கள் முழுமையும் நம்மால் அனுஷ்டிக்க முடியாதவைகளாகையினால் அவைகள் ஸ்தானத்திலே ப்ரபத்தியினால் வசீகரிக்கப்பட்ட பகவான் நின்று அந்தக் கர்மங்களினால் வரக்கூடிய பாப நிவ்ருத்யாதி பலங்களைக் கொடுப்பதற்காக முதலில் அங்கப்ரபத்தி செய்யவேண்டும், நடுவில் விக்னங்கள் ஏற்பட்டால் அவைகளை நிவ்ருத்தி செய்வதற்காகவும் மறுபடியும் ப்ரபத்தி செய்யவேண்டும் என்று தாத்பர்யம். அவிச்சிந்ந-இடைவிடாத, ஸ்ம்ருதி - நினைவினுடைய. ஸந்தாநரூபமாய்-பாரம்பரியாய். ஸ்வப்நதீ-கனவில் உண்டான புத்தி. தர்சந - நேரில் பார்ப்பது. வெளிச்சிறப்பை - விசதமான ப்ரகாசத்தை. ஆஸநாதி - ஆஸனம் முதலிய, பரிகரயுக்தமாய் - அங்கங்களுடன்கூடியதாய். ஏகாக்ரதா - ஒரே விதமான லக்ஷ்யத்தை உடையதாயிருக்கைக்கு, அநுகுண - தகுந்ததான, தேசகாலங்களிலே - தேசம், காலம், இவைகளில், அநுதிநம் - தினம் தோறும், அநுவர்த்திக்க - தொடர்ச்சியாகச் செய்துகொண்டுவா. அந்திமப்ரத்யயாந்தமாய் - அந்திமப்ரத்யயத்தை முடிவாக உடையதாய். அந்திமப்ரத்யயமாவது மரணமடையும் ஸமயத்தில் கடைசியில் உண்டாகும் நினைவு, அது பகவானைப் பற்றியதாகவே இருக்கவேண்டும் என்று தாத்பர்யம். சப்தாதிபேதாத் - சப்தம் முதலியவைகள் வெவ்வேறாய் இருப்பதினால், நாநா - (ப்ரும்மவித்யைகள்) வெவ்வேறு. பலபேதம் - ப்ரயோஜன (பல)த்தில் வ்யத்யாஸம். யதாருசி - அவரவர்கள் புத்திக்குத் தக்கபடி,

1. சாரீரக ஸூத்ரம்-3-3-56.    2.



முத்ஸ்ருஜ்ய கோவிந்தம் நாந்யமாராதயாமி ஹோ' என்கிறபடியே அவனை யல்லால் மற்றொரு தெய்வந்தொழாதே 1 'ப்ரணமந்தி தேவா:' என்னும் படியே யவர்கள் தொழ நிற்குமிவன் அநந்யபக்தன். ப்ரயோஜநாந்தர பரனுடைய பகவத்ப்ரேமம் கணிகாநுராகதுல்யம். அநந்ய ப்ரயோஜநனுடைய பகவத்ப்ரேமம் பதிவ்ரதாநுராகதுல்யம். ஆத்மகுணங்களில்லாதவனுக்கு ஸம்ஸ்காரங்களெல்லா முண்டானாலும் சுத்தியில்லை யென்றும், ஆத்மகுணவ்ருத்தியுடையவன் ஸம்ஸ்காரங் களில் பெற்றது கொண்டு சுத்தனுமென்றும் [illegible] சொன்ன குணங்களில் 2 'மயி சாநந்யயோகேந பக்திரவ்யபிசாரிணீ'

அதாவது எந்த வித்யையை அனுஷ்டிக்கலாம் என்று தோன்றுகிறதோ அதை அனுஷ்டிக்கலாம் என்றபடி. அஹம் - நான், கோவிந்தம் - கோவிந்தனாகிய பகவானை, உத்ஸ்ருஜ்ய - விட்டுவிட்டு, அந்யம் - வேறு ஒருவனை, ந ஆராதயாமி - ஆராதிக்கவில்லை, 'ஹோ' என்றது ஸம்புத்தி. அவனை யல்லால் - அந்த ஸர்வேச்வரனையன்றி. தேவா: - தேவதைகள், ப்ரணமந்தி - ஸேவிக்கிறார்கள். அவர்கள் தொழ நிற்கும் - அந்தத் தேவதைகள் ஸேவிக்கும்படி நிற்கிற. இவன் - கீழ்க்குறித்த பக்தி யோகநிஷ்டன். அநந்யபக்தன் - வேறொருவரிடத்திலும் பக்தியைச் செய்யாதவன். ப்ரயோஜநாந்தரபரன் - மோக்ஷத்தைத் தவிர மற்றப் புருஷார்த்தங்களில் ஆசை உடையவன். பகவத்ப்ரேமம் - பகவானிடத்தில் உண்டான ப்ரீதி, பக்தி என்றபடி. கணிகாநுராகதுல்யம் - தாஸிகள் புருஷர்கள் இடத்தில் ஆசைப்படுவதற்கு ஸமமாகும், அதாவது அவர்கள் எப்படித் தங்களுடைய ப்ரயோஜனத்திற்காகப் புருஷர்களிடத்தில் ப்ரீதி பண்ணுகிறார்களோ அதைப்போல இருக்கும் என்றபடி. அநந்யப்ரயோஜநன் - வேறு ஒரு ப்ரயோஜனத்தில் ஆசை இல்லாதவன். பதிவ்ரதாநுராகதுல்யம் - பதிவ்ரதையான ஸ்திரீ பர்த்தாவினிடத்தில் ப்ரீதி செய்வதற்கு ஸமானமாக இருக்கும், அதாவது அவர்கள் பர்த்தாவினுடைய ப்ரீதியையே முக்ய ப்ரயோஜனமாகக் கருதுவதைப்போல இருக்கும் என்றபடி. ஆத்மகுணங்கள் - ஆத்மாவிற்கு அவச்யம் வேண்டியதான அமாநித்வம் முதலிய குணங்கள். ஸம்ஸ்காரங்கள் - உபநயனம், பஞ்ச ஸம்ஸ்காரம் (ஸமாச்ரயணம்) முதலியவைகள். பெற்றது கொண்டு - கிடைத்ததையே வைத்துக்கொண்டு. மயி - என்னிடத்தில், அநந்யயோகேந - வேறு ஒருவரிடத்திலும் ஸம்பந்தப்படாமையினால், அவ்யபிசாரிணீ - வ்யபிசார தோஷம் இல்லாத, பக்தி: -

1. விஷ்ணுதர்மம்-43-28.    2. கீதை-13-10.

என்கிற பரஸ்ய வரணீயதா ஹேது: குணவிஶேஷம் ப்ருஷ்டம்.

இப்படி ஸாங்கமான ஶக்தியோகத்தில் அதிகாரிக்கைக்கீடான விளம்பக்ஷமத்வஜ்ஞான ஶக்த்யாதிகளன்றிக்கே 1 'நின்னருளே புரிந்திருந்தேன்,' 2 'துணியேனினி நின்னருளல்லதெனக்கு,' 3 'உன்றிருவருளாலன்றிக் காப்பரிதால்' என்றிருக்கு மதிகாரிக்கு அநுஷ்டேயமான ஶரணவரணம் ஆநுகூல்யஸங்கல்பாதிஸஹகாரியுக்தமாய், 4 'அநந்யஸாத்யே ஸ்வாபீஷ்டே' இத்யாதிகள்படியே உபாயத்வப்ரார்த்தனாஸக்த பக்தியும்.

பரஸ்ய - பரமாத்மாவினால், வரணீயதா - வேண்ட (வரிக்கப்)படக் கூடியவனா யிருக்கைக்கு, ஹேது: - காரணமான, குணவிஶேஷம் - பகவானிடத்தில் மிகவும் அதிகமான ப்ரீதியாகிற குணம்.

இப்படி - கீழ் நிரூபித்தருளிய ப்ரகாரமாக ஸாங்கமான - அங்கங்களுடன் கூடிய. அதிகாரிக்கைக்கீடான - அதிகாரியாவதற்குத் தகுந்ததான, விளம்பக்ஷமத்வம் - பலத்தில் ஸாவகாசத்தைப் பொறுத்துக் கொண்டிருக்கை, ஜ்ஞாந - அதை அறியக்கூடிய ஜ்ஞானம், ஶக்தி - அதை அனுஷ்டிக்கக் கூடிய ஶக்தி, 'ஆதி' ஶப்தம் ஶாஸ்திரத்தில் விதிக்கப்பட்டிருக்கும் வர்ணாஶ்ரமங்களை உடையவனா யிருக்கையைச் சொல்லுகிறது, அன்றிக்கே - இல்லாமல். நின் - உன்னுடைய, அருளே - க்ருபையையே, புரிந்து இருந்தேன் - எனக்கு ரக்ஷகமாக அங்கீகரித்துக் கொண்டிருந்தேன். எனக்கு நின் அருள் அல்லது - உன்னுடைய க்ருபையைத் தவிர மற்றொன்றை, துணியேன் - ரக்ஷகமாக விஶ்வாஸம் செய்யமாட்டேன். உன் திருவருளாலன்றி - உன்னுடைய க்ருபையைத் தவிர வேறு ஒன்றினால், காப்பு - ரக்ஷிப்பது, அரிது - அஶக்யம், 'ஆல்' என்பது துக்கத்தைக் காட்டும் அவ்யயம். அநுஷ்டேயமான - அனுஷ்டிக்கத்தக்கதான, ஶரணவரணம் - ஶரணமாக வரித்தல், ஶரணாகதி என்றபடி. ஆநுகூல்யஸங்கல்பாதிஸஹகாரியுக்தமாய் - ஆநுகூல்ய ஸங்கல்பம் முதலிய அங்கங்களோடு கூடினதாய். ஸ்வாபீஷ்டே - தனக்கு இஷ்டமான பலம், அநந்யஸாத்யே - வேறு ஒன்றினாலும் ஸாதிக்க முடியாமல் இருக்கும் பொழுது (மஹா விஶ்வாஸத்துடன் கூடினவனைக் கொண்டு பகவான் ஒருவனே உபாயமாகவேண்டுமென்று யாசிப்பது ப்ரபத்தி, அது தான் சரணாகதி). உபாயத்வப்ரார்த்தனாஸக்த - உபாயத்வ ப்ரார்த்தனையுடன் சேர்ந்த, அவ்விஷயத்தில் - எதற்காகப் பரந்யாஸம் செய்யப்பட்டதோ அந்த

1. பெரியாழ்வார் திருமொழி - 5-4-1.
2. பெரிய திருமொழி - 11-8-8.
3. திருவிருத்தம் - 62.
4. பாதமுனி வாக்யம்.



ந்யாஸாங்கமாயிருக்கும். அத்யாகிஞ்சனனுடைய ந்யாஸத்திற்கும் அவ்விஷயத்தில் கர்த்தவ்யஶேஷமில்லை. ஸர்வஶக்தியினுடைய ஸங்கல்பத்துக் கவாந்தரவ்யாபாராபேக்ஷாநியமமில்லை. இரண்டு மிப்படி ஸக்ருத்தாயிருக்கும். ஆசார்யனாலே தன்னை ந்யஸ்தபாரனாக அறிந்த ஶிஷ்யன் தான் பரந்யாஸம் பண்ணான். இவனுக்கு மத்யத்தில் ஶங்காதிகள் வந்தாலும் ஆசார்யனுடைய பரந்யாஸம் பலாவிநாபூதம். அவன் தனக்காகப் பண்ணின பரந்யாஸம் தனக்கு ஜ்ஞாதமல்லாதபோது தானும் பரந்யாஸம் பண்ணினால் பூர்வந்யாஸம் பலித்தே விடும். பின்பிலிது மிகுதியான ஸுக்ருதத்தின் படியாம். உயர்ந்த திடர்க்கடைத்தேற்றலாம்படி தாழ்ச்சியுடைய விஷயத்தில் தானே ப்ரவஹிக்கும்படியான க்ருபாகுணத்தாலே ஸ்வதந்த்ரஶேஷி தன் கூறாகவும் தன் பேறாகவும் மேலுள்ள நன்மைகளை யெல்லாம்

விஷயத்தில், கர்த்தவ்யஶேஷம் - இதற்குப் பிறகு செய்யவேண்டிய பாகம். ஸர்வஶக்தியினுடைய - எல்லாவற்றையும் செய்யக்கூடிய ஸாமர்த்தியமுடைய பகவானுடைய. அவாந்தரவ்யாபாராபேக்ஷாநியமம் - நடுவில் ஒரு வ்யாபாரத்தை அபேக்ஷிக்கவேண்டும் என்கிற நியமம். இரண்டும் - பரந்யாஸமும், பகவானுடைய ஸங்கல்பமும், ஸக்ருத்தாயிருக்கும் - ஒருதரம் செய்யக்கூடியதாயிருக்கும். ந்யஸ்தபாரனாக - பரந்யாஸம் செய்யப்பட்டவனாக. ஶங்காதிகள் - ஸந்தேஹம் முதலியவைகள், பலாவிநாபூதம் - பலத்தை விட்டுப் பிரியாதது. அவன் - அந்த ஆசார்யன், தனக்காக - ஶிஷ்யனாகிய தனக்காக. ஜ்ஞாதமல்லாதபோது - அறியப்படாமல் இருக்கும் காலத்தில், பூர்வந்யாஸம் - முன்பு ஆசார்யனால் செய்யப்பட்ட பரந்யாஸம். பின்பிலிது - தன்னால் செய்யப்பட்ட இந்தப் பரந்யாஸம். ஸுக்ருதத்தின்படியாம் - இவனால் செய்யப்படும் ப்ரதக்ஷிணம், அஞ்ஜலி, நமஸ்காரம் முதலியவைகளைப் போலாய்விடும், அதாவது மோக்ஷத்திற்குக் காரணமாகவன்றிக்கே பகவத் ப்ரீதிக்குக் காரணமாகும் என்றபடி. உயர்ந்த - உன்னதமான, திடர்க்கு - மேட்டு நிலத்திற்கு, அடைத்து - தடுத்து, ஏற்றலாம்படி - ஏறும்படி செய்யலாம் என்னும்படியாக. தாழ்ச்சியுடைய - தாழ்ந்திருக்கையை உடைய, அன்றிக்கே தன்னிடத்தில் ப்ராவண்யத்தையுடைய, தானே ப்ரவஹிக்கும்படியான - ஒருவருடைய ப்ரயத்தினமன்றிக்கே தானே ப்ரவஹிக்கக்கூடிய. க்ருபாகுணத்தாலே - க்ருபை என்கிற குணத்தினாலே. ஸ்வதந்த்ரஶேஷி - ஸ்வதந்திரனும் ஶேஷியாயும் இருக்கிற எம்பெருமான், தன்கூறாகவும் - தன்னுடைய பாகமாகவும், அதாவது தன்னால் செய்யவேண்டிய கார்யமாகவும், தன்பேறாகவும் - தன்னுடைய ப்ரயோஜனமாகவும், மேல் உள்ள - ப்ரபத்திகாலத்திற்குப்

விளக்கும். இந்த ச்ருதி 1 'தாவதார்த்தி:' இத்யாதிகள்படியே அங்கமாயும் ஸ்வதந்த்ரமாயும் நின்று ஸகலபலஸாதநமாகையாலும், அபேக்ஷிதஸித்திக்குக் கை முதலற்று சரண்யஸ்வபாவாதிபரிஜ்ஞானமுடையாரெல்லாருக்கும் அதிகரிக்கலாமாகையாலும், தன் பலம் போலே தேசகாலாதி நியமமில்லாமையாலும், ஸாங்கமாக ஸக்ருத்கர்த்தவ்யமாகையாலும், ஸுகரமாகையாலும், 2 'உபாயஸ்ஸுகரஸ்ஸோயம் துஷ்கரஸ்ச மதோ மம' என்னும்படியான வ்யவஸாயகௌரவத்தை யுடைத்தாகையாலும், ப்ரஹ்மாஸ்த்ரத்வ

பிறகு உண்டாகக்கூடிய, நன்மைகளை - ஹிதங்களை, விளக்கும் - உண்டாக்கும். ஆர்த்தி: - ஆர்த்தியானது, தாவத் - அவ்வளவே (அதாவது எது வரையில் ஸர்வ பாபங்களையும் போக்கடிக்கக் கூடிய பகவானை சரணமாக அடையவில்லையோ அதுவரையில்). அங்கமாயும் - பக்தி யோகத்திற்கு அங்கமாயும். ஸகலபலஸாதநமாகையாலும் - எல்லாப் பலங்களையும் கொடுக்கக்கூடிய தாகையினாலும். அபேக்ஷிதஸித்திக்கு - தன்னுடைய இஷ்டபலம் ஸித்திப்பதற்கு, கைமுதலற்று - தன் கையில் ஒரு உபாயமுமில்லாமல். சரண்ய - நம்மால் சரணமாக அடையத் தகுந்தவனாகிய பகவானுடைய, ஸ்வபாவ - கருணை முதலிய குணங்களை உடையவனாயிருக்கை. ஆதி பதம் ப்ரபத்தி விஷயமான அங்காங்கி ஜ்ஞானத்தைக் குறிக்கிறது. பரிஜ்ஞானம் - நிச்சய ரூபமான ஜ்ஞானம். அதிகரிக்கலாமாகையாலும் - அனுஷ்டிக்கக்கூடு மாகையினாலும், தன்பலமும் - ப்ரபத்தியின் பலமான மோக்ஷம். தேசகாலாதி நியமம் - இன்ன காலத்தில் இந்த இடத்தில் தான் அனுஷ்டிக்கலாம் என்கிற நியமம். மோக்ஷமாகிற பலத்திற்கு இந்தத்தேஹம் விட்டபிறகு என்கிற காலநியமமும், நித்யவிபூதி என்கிற தேச விசேஷத்தில் சென்றால்தான் என்கிற தேசநியமமும் உண்டு, அது இங்கில்லை என்றபடி. ஸாங்கமாக - அங்கங்களுடன் கூடியதாக. ஸுகரமாகையாலும் - ஸுலபமாய் அனுஷ்டிக்கக்கூடிய தாகையினாலும். ஸோயம் - அப்படிப்பட்ட இந்த, உபாய: - ப்ரபத்தியாகிற உபாயம், ஸுகர: - ஸுலபமாய்ச் செய்யக்கூடியதாயும், துஷ்கரஸ்ச - ஸுலபமாய்ச் செய்யக்கூடாததாயும், மம - எனக்கு, (என்னுடைய), மத: - அபிப்ராயத்தில் கொள்ளப்பட்டது. வ்யவஸாயகௌரவம் - மஹாவிச்வாஸத்தில் உண்டான ப்ரயாஸம். ப்ரஹ்மாஸ்த்ரத்வத்தையாலும் - ப்ரும்மாஸ்திரத்திற்கு ஸமமாக இருக்கிறபடியினாலும், அதாவது வேறொரு உபாயத்தைத் தனக்கு ஸஹாயமாக அனுஷ்டிப்பதைப் பொறுத

1. விஷ்ணு புராணம்-1-9-73. 2. லக்ஷ்மீதந்திரம்-17-104.

ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

॥ பகவந்நிவேதிதோபயோகாதிகார: த்ருதீய: ॥

அத ஶாஸ்த்ரத்ருஶாம் ஶாஸ்த்ரைஶ் சதுர்வர்க்கபரீப்ஸிநாம் ।
விஷ்ணோர் நிவேதிதைரேவ போஜ்யத்வம் ப்ரதிபாத்யதே ॥

ஸங்க்ஷிப்தம் ஹ்யேதத் ஸங்க்ரஹேணாகமப்ராமாண்யே யாமுநார்யபாதை: । ப்ரபஞ்சிதம் ச வரதராஜ பண்டிதை: ஸன்மார்க்கதீபிகாயாம் । ததநுஸாரேணாஸ்மாபிரநதிஸங்க்ஷேப விஸ்தரம் ப்ரதிபாத்யதே । [பூர்வபக்ஷ:]

நந்வேவம் பகவந்நிவேதிதஸ்ய ப்ராஹ்யத்வம் விவக்ஷிதம் - கிமஸ்ய போஜ்யத்வமாத்ரம் விவக்ஷிதம்? உத போக்து: ப்ரத்யவாயாநாபாதகத்வம்? யத்வா போக்துரதிஶயிதஹிதத்வம்? நாத்ய: - அவிவாதாத் । நத்விதீய த்ருதீயௌ - ப்ரஷ்ட ப்ரத்யவாய

ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸ்ரீநிவாஸராமாநுஜ மஹாதேசிகாய நம:

## பகவந்நிவேதித உபயோகாதிகாரம் என்னும் மூன்றாவது அதிகாரம்.

சாஸ்த்ரங்களினால் கண்ணை உடையவர்களாயும், (அதாவது சாஸ்த்ரங்களைக்கொண்டு அறியும் தன்மையை உடையவர்களாயும் என்றபடி) நான்கு விதமான புருஷார்த்தங்களை விரும்புகிறவர்களாயுமிருப்பவர்களுக்குப் பகவானுக்கு நிவேதனம் செய்யப்பட்டவைகள் ஸாப்பிடத்தக்கவைகள் என்பது இதில் நிரூபிக்கப்படுகிறது.

இந்த விஷயம் ஆகமப்ராமாண்யத்தில் பகவானாகிய யாமுனாசார்யரால் (ஆளவந்தாரால்) சுருக்கமாக நிரூபிக்கப்பட்டிருக்கிறது. வரதராஜ பண்டிதரால் ஸன்மார்க்கதீபிகை என்னும் க்ரந்தத்தில் விஸ்தாரமாக நிரூபிக்கப்பட்டிருக்கிறது. அவைகளை அனுஸரித்து நம்மால் அதிக சுருக்கமில்லாமல் அவ்விஷயம் நிரூபிக்கப்படுகிறது.

[பூர்வபக்ஷம்.]

இவ்விடத்தில் பூர்வபக்ஷீ இந்த மாதிரியாக ஆக்ஷேபிக்கிறான். பகவானுக்கு நிவேதனம் செய்யப்பட்டது ஸாப்பிடத்தக்கது என்று சொல்லும்பொழுது அது ஸாப்பிடக்கூடிய வஸ்து என்பது மாத்திரம் சொல்லப்படுகிறதா? அதை ஸாப்பிட்டவனுக்கு அது தோஷத்தை உண்டாக்காது என்பது சொல்லப்படுகிறதா? அன்றிக்கே ஸாப்பிட்டவனுக்கு மிகவும் நன்மையைக் கொடுக்கக்கூடியது என்று சொல்லப்படுகிறதா? முதலாவது பக்ஷம் உசிதமல்ல— அதில் விவாதமில்லாமையால். இரண்டாவது மூன்றாவது பக்ஷங்களும் உசித

[illegible]

மல்ல—த்ருஷ்டத்தில் தோஷமில்லையென்பதிலும் த்ருஷ்டத்தில் நன்மையைக் கொடுக்கக்கூடியது என்பதிலும் விவாதமில்லாமையினால். அத்ருஷ்டமான தோஷமோவெனில் (அதை ஸாப்பிட்டால்) ப்ராயச்சித்தம் முதலிவைகளைச்சொல்லுகிற சாஸ்த்ரங்களினால் அறியப்பட்டிருப்பதினாலே அது இல்லை என்று மறுப்பது முடியாததாலும், ஆதலால் அதையே ஸாப்பிடவேண்டுமென்று விதியில்லாமையினாலே அத்ருஷ்டத்தில் நன்மையைக் கொடுக்கக்கூடியதுஎன்பதும் ஸித்திக்கவில்லையாதலாலும். ‘நிர்மால்யத்தையும் நைவேத்யத்தையும் ஸாப்பிட்டால் சாந்த்ராயண வ்ரதம் செய்யவேண்டும்’ என்று ஸ்ம்ருதியில் சொல்லப்படுகிறது. நிர்மால்யமாவது தேவதைகளுக்கு உபயோகப்படுத்தப்பட்ட புஷ்பம் முதலியவைகள். நிவேத்யம் நிவேதனம் செய்யப்பட்ட வஸ்து. மனுவினாலும் ஸாப்பிடத்தகாத வஸ்துக்களைச் சொல்லுமிடத்தில் ‘வீணாக க்ருஸரம், பாயஸம், அபூபம் (வடை முதலிய பக்ஷ்யம்), ஸம்ஸ்காரம் செய்யப்படாத மாம்ஸம், தேவதைகளுடைய அன்னங்கள், ஹவிஸ்ஸுக்கள், இவைகளை ஸாப்பிடக்கூடாது’ என்று சொல்லப்பட்டிருக்கிறது. பொதுவாக உச்சிஷ்டம் அதாவது எச்சிலை ஸாப்பிடக்கூடாது என்று சாஸ்த்ரங்களில் தடுக்கப்பட்டிருப்பதினால் தேவதைகளுக்கு நிவேதனம் செய்யப்பட்டதை ஸாப்பிடுவதும் தடுக்கப்பட்டதுதான். பொதுவாக ஏற்பட்ட நிஷேதத்திற்கு அக்நீஷோமியம் என்னும் யாகத்தில் செய்யப்படும் ஹிம்ஸையைப்போலவும், ஸோமபானத்தில் எச்சிலை விதித்திருப்பதைப்போலவும், இவ்விஷயத்தில் அபவாதம் (விலக்கு) காணப்படவில்லை. தகப்பனார், ஆசார்யன், பர்த்தா, யஜமானன் இவர்களுடைய எச்சில் சிஷ்யன், பத்நீ, வேலைக்காரர்கள் இவர்களால் ஸாப்பிடத்தக்கதென்று தர்மம் தெரிந்தவர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டிருப்பதினாலே இவ்வுலகத்தைக்குறித்து பகவான் அப்படிப்பட்டவரென்பது ‘நான் புத்ரன், சிஷ்யன்’ என்றிவை



[illegible]

முதலிய அநேக சாஸ்த்ரங்களில் ஏற்பட்டிருப்பதினாலே அவருடைய உச்சிஷ்டம் எல்லாராலும் ஸாப்பிடத்தக்கதாக அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்வது உசிதமல்ல— உச்சிஷ்டத்தை ஸாப்பிடலாமென்று அனுமதி செய்வதற்குக் காரணமான தகப்பனாயிருக்கும் தன்மை முதலியது இவ்விடத்தில் ஸித்திக்கவில்லையாதலால். ஏற்கனவே ஸித்தமாயிருக்கிற உலகத்திற்கு நிமித்தகாரணமாயிருக்கை முதலியது மாத்திரம் அதற்குக்காரணமாகாதாகையினால், அப்படி அதற்குக் காரணமாக இருக்கும் பக்ஷத்தில் அதிப்ரஸங்கம் என்னும் தோஷம் வருகிறபடியினால். (எப்படியெனில்:—) அப்படிப்பட்ட தகப்பனாராயிருக்கும் தன்மை முதலியது ப்ருஹ்மா ருத்ரன் முதலியவர்களுக்கும் எவ்விதத்திலாவது இருக்கிறதல்லவா— சில வஸ்துக்களைப்பற்றி காரணமாகயிருக்கை, சிலருக்கு சாஸ்திரங்களை உபதேசிக்கும் தன்மை, யஜமானனாக இருக்கை முதலியவைகளால் அவர்களுக்கும் அது ஸித்திக்குமாதலால். நம்மைக்குறித்து அவர்களுக்கு நேரில் பிதாவாக இருக்கை முதலியது இல்லையே என்னில், அது உசிதமல்ல— ப்ரக்ருதமான விஷ்ணு விஷயத்திலும் அது துல்யமாதலால். பிதா முதலியவர்களாகிய அந்தந்த ஜீவாத்மாக்களைச் சரீரமாக உடையவனாகையினாலாவது தன்னுடைய சரீரத்திலிருந்து ப்ரஜைகளை ஸ்ருஷ்டி செய்வது மாத்திரத்தினாலாவது அல்லவோ பகவானுக்கு பிதாவாகயிருக்கும் தன்மை இருக்கிறது, ஆராதனத்துக்கு உத்தேச்யமாகிய வாஸுதேவன் முதலிய திவ்யமங்கள விக்ரஹத்தை உடையவனாகையினால் அல்லவே. அப்படி பிதா முதலியவர்களைச் சரீரமாக உடையவனாயிருக்கையும் ப்ருஹ்மா முதலியவர்களுக்கு இல்லையென்பது விசேஷம் என்னில், உண்மைதான், அப்படியிருந்தபோதிலும் பிதா முதலியவர்களைச் சரீரமாக

[illegible]

உடைய பகவானால் அமுது செய்யப்பட்ட மிகுதியே ஸாப்பிடத்தகுந்த தென்று அனுமதி செய்யப்பட்டிருக்கிறது என்று நினைக்கத்தக்கது. வேறு சரீரத்தை உடையவனான பகவானால் அமுது செய்யப்பட்ட மிகுதியல்ல. அப்படிக்கில்லாவிடில் ப்ரும்மா ருத்ரன் முதலியவர்களைச் சரீரமாக உடைய பகவானால் அமுது செய்யப்பட்ட மிகுதியும் ஸாப்பிடத்தகுந்ததாக வேண்டி வருமாதலால். பிதா முதலியவர்களினால்நேரிலேயே ஸாப்பிடப்பட்ட மிகுதி ஸாப்பிடத்தக்கது, ஆகையினால் அதிப்ரஸங்கமில்லையே என்னில், அது உசிதமல்ல— வாஸுதேவன் முதலிய விக்ரஹங்களை ஆராதனம் செய்யும்பொழுது அந்தந்த விக்ரஹத்தின் வழியாக பகவான் புஜிக்கிறானாகையினால், விக்ரஹம் மாத்திரத்தினால் உண்டான இடைவெளி தோஷமில்லை என்னில், எல்லா வஸ்துக்களும் அவனுக்குச் சரீரமென்பது சாஸ்திரங்களில் ஏற்பட்டிருப்பதினால் அதிப்ரஸங்கதோஷம் பரிஹரிக்கமுடியாததாலால். ஆகையினாலே லோகத்தில் ஏற்பட்ட பிதாவாக இருக்கை முதலியது தான் அவ்விடத்தில் சொல்லப்படுகிறது. அதுவும் பகவானுடைய அவதாரங்களில் எவர்களைக் குறித்திருக்கிறதோ அவர்கள் மாத்திரம் அவருடைய உச்சிஷ்டத்தை ஸாப்பிடலாம், மற்றவர்கள் ஸாப்பிடக்கூடாது என்ற நியமம் அறியத்தக்கது. பகவான் எல்லாருக்கும் தகப்பனாராகயிருக்கிறாராகையால் அவருடைய உச்சிஷ்டம் ஸாப்பிடத்தக்கதானால் அந்தக் காரணத்தினாலேயே அவருக்கு மூத்த புத்ரனாக (முதல் பிள்ளையாக) ச்ருதி முதலியவைகளில் ஏற்பட்ட ப்ருஹ்மாவினுடைய உச்சிஷ்டமும் ஸாப்பிடக்கூடியது என்பது ஏற்படுகிறது. முதல் தமையன் தகப்பனாருக்கு ஸமமானவன் என்பதும் அவனுடைய உச்சிஷ்டத்தை ஸாப்பிடலாம் என்பதும் சாஸ்த்ரத்தால்



[illegible]

ஏற்பட்டதுதான். இவ்விடத்தில் (ப்ருஹ்மாதிகளினுடைய உச்சிஷ்டத்தை ஸாப்பிடக்கூடாது என்று) நிஷேதமிருக்கிறபடியால் அதை விட்டுவிடுகிறோம் என்பது உசிதமல்ல— இவ்விடத்திலும் பொதுவான நிஷேதம் முடிவை அடைகிறது என்பது முன்னமேயே நிரூபிக்கப்பட்டிருக்கிறபடியினால். மேலும் பகவான் பிதாவாகயிருக்கிறான் என்பதைப்போல மாதாவாகயிருக்கிறான் என்பதும் ‘மாதா, பிதா, ப்ராதா, எல்லாவற்றிற்கும் ஆதாரம், எல்லாவற்றையும் காப்பாற்றுகிறவன், ஸ்நேஹிதன், அடைய வேண்டிய வஸ்துவெல்லாம் நாராயணன்;’ என்றிவை முதலிய அநேக வாக்யங்களினால் ஏற்பட்டிருப்பதினால் தாயாருடைய உச்சிஷ்டத்தை ஸாப்பிடுவது சாஸ்த்ரங்களில் அங்கீகரிக்கப்படாமையினால் பகவானுடைய உச்சிஷ்டமும் அனுமதி செய்யப்படவில்லை என்று ஏன் ஏற்படக்கூடாது?

பிதாவாக இருக்கை முதலியவைகளைப்பற்றி நிர்பந்தம் செய்வதினால் என்ன ப்ரயோஜனம்? வசனத்தினாலேயே பகவானுடைய உச்சிஷ்டம் ஸாப்பிடத்தக்கது என்பது ஸித்தித்து விடுகிறது— பொதுவான நிஷேதம் அந்த வசனத்தை அனுஸரித்துச் சுருக்கத்தக்கதாதலால். எப்படி எனில்— மஹோபநிஷத்தில் “விஷ்ணுவினால் ஸாப்பிடப்பட்டதை ஸாப்பிடுகிறார்கள், விஷ்ணுவினால் பானம் செய்யப்பட்டதை பானம் செய்கிறார்கள், விஷ்ணுவினால் முகரப்பட்டதை முகருகிறார்கள், விஷ்ணுவினால் ரஸம் அறியப்பட்டதை ரஸிக்கிறார்கள், ஆகையினால் வித்வான்கள் விஷ்ணுவினால் அங்கீகரிக்கப்பட்டதையே ஸாப்பிடகடவர்கள்” என்று சொல்லப்பட்டிருக்கிறது. ரஹஸ்ய ஆம்நாய ப்ராஹ்மணத்தில் ஸந்யாஸியைப் பற்றிச் சொல்லும் ப்ரகரணத்தில் “பிறகு கைங்கர்யம் செய்பவனாய்

[illegible]

பெருவிடில் தானே அன்னத்தினுல் செய்யவேண்டும்'' என்று சொல்லப்பட்டிருக்கிறது. எதையெனில் தான் ஸாப்பிடுவதாகிய பகவதாராதனத்தை என்று மிகுதி வாக்யத்தைச்சேர்த்துக் கொள்ளவேண்டும். ப்ருஹ்மசாரி வானப்ரஸ்தன் இவர்களைப்பற்றிச் சொல்லுமிடத்திலும் இதே வாக்யம் சொல்லப்பட்டிருக்கிறது. க்ருஹஸ்தாச்ரமத்தைச் சொல்லுமிடத்திலும், 'பிறகு கைங்கர்யம் செய்கிறவர்கள் ஸமீபித்திலிராவிடில் தானே அன்னத்தினுல் செய்யவேண்டும்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. முதலில் நிவேதனமெசய்யப்படாதவைகளும் ஸாப்படும்பொழுது கிடைத்தவைகளுமான வஸ்துக்களை மனதினுல் நிவேதனம் செய்து சாப்பிடவேண்டுமென்பது சொல்லப்படுகிறது. எப்படியெனில்:— பகவானுக்கு நிவேதனம் செய்யப்பட்டதை ஸாப்பிடுவதாகிய அனுயாகத்தை சொல்ல ஆரம்பித்து 'அன்னத்தினுலேயே த்வாதசாக்ஷரத்தைச்சொல்லி அனுயாகம் செய்யவேண்டும். பிறகு சாப்பிட ஆரம்பித்தபிறகு ஆஹாரத்திற்கு அங்கங்களாகிய வஸ்துக்கள் கிடைக்குமேயானுல் அவைகள் எப்படி நிவேதனம் செய்யப்பட்டவைகளாகுமோ அப்படி அந்த நடுவில் கிடைத்த வஸ்துக்கள் மனஸினுல் நிவேதனம் செய்யக்கூடியவைகளாகின்றன. பஹிஷ்டா ஸ்த்ரீயையும், ப்ரஸவித்த ஸ்த்ரீயையும், பிணத்தையும் தொட்டவனைத் தவிர மற்றவர்களுக்கு மனதிற்கு ஒரு தோஷமில்லையாதலால்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. பாஞ்சராத்ர சாஸ்த்ரங்களிலும் நூறுக்கு மேற்பட்ட வசனங்களிருக்கின்றன. எப்படியெனில்:— ஸாத்வதஸம்ஹிதையில் ஏழாவது பரிச்சேதத்தில் 'உத்தம்ஷ்டம்' என்றாரம்பித்துச் சொல்லப்பட்டிருக்கிறது. [இதற்கு அர்த்தம் மேலே விவரிக்கப்பட்டிருக்கிறது.] காரிகளுக்கு (தத்காரிகள் என்று சொல்லப்பட்ட பகவானுக்கு கைங்கர்யம் செய்பவர்களுக்கு) கொடுக்கப்பட்ட அன்னமெல்லாம் பாகம் செய்தபாத்தி



[illegible]

ரத்தில் மிகுதியான அன்னத்தோடு சேர்க்கப்பட்டதாய் பகவந்நிவேதனம் செய்யப்பட்ட அன்னத்தோடு சேர்ந்ததாயும் பாஞ்சராத்ரசாஸ்த்ரத்தில் நிஷ்டையுடைய எல்லாருக்கும் மிகவும் நன்மையைக் கொடுக்கக்கூடியதாக ஆகும், அநிஷ்டத்தைப் போக்கடிக்கிறபடியினுலும் இஷ்டத்தைக் கொடுக்கிறபடியினுலும் அவச்யமாய் ஸாப்பிடத்தக்கது என்றர்த்தம். போஜனம் என்பது கர்மமென்கிற அர்த்தத்தைச் சொல்லுகிற '[illegible]' என்னும் விகுதியை கடைசியிலுள்ளது. அதிலேயே ஸ்ரீநரஸிம்ஹ கல்பத்தைச் சொல்லும் பரிச்சேதத்தில் 'ஒரு ப்ரயோஜனத்திலும் ஆசையில்லாதவன் பரிசுத்தமாவதற்காக முதலில் கொஞ்சம் எடுத்து தலையில் தாரணம் செய்துவிட்டு மந்த்ரத்தினுல் பரிசுத்தம் செய்யப்பட்ட அந்த அன்னத்தை மௌனத்துடன் கூடினவனுய் ஸாப்பிடவேண்டும். என்று சொல்லப்பட்டிருக்கிறது. பரத்வாஜ ஸம்ஹிதையில் ஹோமத்தைப்பற்றிச் சொல்லுமிடத்தில் '' பகவானுக்கு நிவேதனம் செய்யப்பட்டதை '' என்று துடர்ந்து சொல்லுமிடத்தில் ' அந்தப் பகவானிடத்திலிருந்து அநுஜ்ஞை பெற்றுக்கொண்டவனுய் நிவேதனம் செய்யப்பட்டதை தகுந்தவர்களான ப்ராஹ்மண ச்ரேஷ்டர்களுக்கும் சாந்தியை உடையவர்களான பந்துக்களுக்கும் கொடுத்து வேறொரு ப்ரயோஜனத்தில் ஆசையில்லாத தானும் பத்நீ பிள்ளைகளோடு கூடினவனுய் ஸாப்பிடவேண்டும். எவனொருவன் ப்ரயோஜனத்தில் ஆசையுடையவனே அவன் அப்படி ப்ராஹ்மணர் முதலியவர்களுக்குக் கொடுக்கப்பட்டதின் மிகுதியை ஸாப்பிடவேண்டும்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்ரீபௌஷ்கர ஸம்ஹிதையில் சயநத்தைச் சொல்லுமிடத்தில் ' உபவாஸம் செய்தவர்களான

‘ க்ருத்வாவஶேஷம் யே புஞ்ஜதி ப்ராஶநம் பாரமேஶ்வரம் | ஸர்வ
பூதாவஶிஷ்டம் ச ஸம்யக் தே பூததேஹா நராஸ்ஸதா | ஸேவ்யாநாம் தேவதாநாம் ச
ஸாதூநாம் சைவ ஸித்தஸங்கதே: || ’’ இதி | பாரமேஶ்வரம் பாரமேஶ்வராய
ஸமர்ப்பிதம் நிவேதிதம் இத்யர்த்த: | பாரமேஶ்வரே ஆராதநாத்யாயே
‘ ததஸ்ஸ்வயம் ஸம்வ்ருத்தம் ப்ராஶ்நீயாந் நியத: ஸர்வபாபக்ஷயாவஹம் ஸர்வ
பாபாநாம் கார்யஸம்ஸித்தயேபி ச || ’’ இதி | நாரதீயே ஆராதநா
த்யாயே — ‘ ததஸ்ஸம்பக்தாந் தீக்ஷிதாந் பாஞ்சராத்ரிண: | ஸம்யக்
ச்சாஸ்த்ரவிதாநேந கந்தபுஷ்பாதிபி: க்ரமாத் | தேப்யோ மதுபர்க்கம் ஆதௌ
தேவஸ்ய நிவேதிதம் ஸமர்ப்பயேத் | கிஞ்சித் ஸம்ஸ்தாப்ய பூஜார்த்தம்
விஷ்வக்ஸேநஸ்ய பூர்வத: || ’’ இதி | ப்ரதாநம் விதாய ப்ராயஶ்சி
த்த ப்ரகரணேऽப்யுக்தம் — ‘ உத்தமாத் பாகவதேப்யோ விஷ்ணவே ப்ரப
விஷ்ணவே | ஶுசீநாம் பவித்ராணாம் பாவநாநாம் ச பாவநம் |

---

எவர்கள் பகவானுக்கு நிவேதனம் செய்யப்பட்டதை ஸாப்பிடுகிறார்களோ, ப்ராஹ்மணன் முதலியவர்களுக்குக் கொடுக்கப்பட்டதின் மிகுதியை ஸாப்பிடுகிறார்களோ, அந்த மனிதர்கள் பரிசுத்தமான தேஹத்தை உடையவர்கள், நம்மால் ஸேவிக்கத்தகுந்தவர்களான தேவதைகளுக்கும் ஸித்தர்களுடைய ஸமூஹத்துக்கும் பூஜ்யர்களாகிறார்கள்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதில் பாரமேச்வரம் என்பதற்கு "எல்லாவற்றிற்கும் ஈச்வரனான பகவானுக்கு நிவேதனம் செய்யப்பட்டதை" என்று அர்த்தம். பாரமேச்வர ஸம்ஹிதையில் ஆராதனத்தைச்சொல்லும் அத்யாயத்தில் 'பிறகு தான் பரிசுத்தனாயிருந்து எல்லாப்பாபங்களும் நாசமடைவதற்காகவும் கார்யம் ஸித்தியை அடைவதற்காகவும் பகவானால் அமுது செய்யப்பட்டதை 'ஸாப்பிடவேண்டும்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. நாரதீய ஸம்ஹிதையில் ஆராதனத்தைச் சொல்லுமிடத்தில் 'பிறகு பகவானிடத்தில் பக்தியுள்ளவர்களாயும் பாஞ்சராத்ர சாஸ்த்ரத்தில் நிஷ்டையுடையவர்களாயும் தீக்ஷைசெய்துகொண்டவர்களாயுமிருப்பவர்களை சாஸ்த்ரவிதிப்படி சந்தனம் புஷ்பம் முதலியவைகளினால் க்ரமமாக பூஜைசெய்து அவர்களின் பொருட்டு மதுபர்க்கம் முதலாக பகவானுக்கு நிவேதனம் செய்யப்பட்டதை முதலிலேயே விஷ்வக்ஸேனருடைய ஆராதனத்திற்காக கொஞ்சம் எடுத்துவைத்துக்கொண்டு கொடுக்கவேண்டும்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்படி வைஷ்ணவர்களுக்குக் கொடுக்கவேண்டுமென்பதை விதித்து ப்ராயச்சித்தத்தைச் சொல்லுமிடத்திலும் 'சிறந்த பாகவதர்களினால் ப்ரபுவாகிய விஷ்ணுவுக்கு நிவேதனம் செய்யப்பட்டது சுத்தமான வஸ்துக்களெல்லாவற்றிலும் சுத்தமானது, பரிசுத்தியைக் கொடுக்கக்கூடிய வஸ்துக்கள் எல்லாவற்றிலும் அதிகப் பரிசுத்தியைக் கொடுக்கக்கூடியது.

ஸ்ரீ:

# வேதாந்த தீபிகை.

ஸம்புடம் 15.

1924-1925.

(ரக்தாக்ஷி௵ - குரோதன௵)

ஆர். ஸ்ரீநிவாஸராகவ அய்யங்கார், M. A.
பத்ராதிபர்

சென்னை

ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின்கார்யதர்சியால்
ப்ரசுரம் செய்யப்பட்டது.

சென்னை :
கலாரத்நாகரம் அச்சுக்கூடம்
1925

Copy-right Reserved.

ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

# அட்டவணை.


அருளிச்செயல்களும் இசையும்:—ஸ்ரீமாந் பத்மநாப ராமாநுஜ தாஸர் 149
ஆசமனம்:—ஸ்ரீ. உப. வெ. க்ருஷ்ணமாசார்யர் 46
ஆசார்யவைபவம்:—காடந்தேத்தி ஸ்ரீ. உப. கோபாலாசார்யர் 163, 280
ஆழ்வார்களும் அர்ச்சாவதாரமும்:—காரப்பங்காடு ஸ்ரீ.உப. ஸிங்கப்பெருமாள் ஸ்வாமி 161
ஆழ்வார்களின் ஸாக்ஷாத்காரம்:—ஸ்ரீமாந் பத்மநாப ராமாநுஜதாஸர் 269
இரண்டாம் திருவந்தாதி:—ஸ்ரீ. உப. கோபாலக்ருஷ்ணமாசார்யர் 201
உபயவேதாந்த ஐககண்ட்யம்:—ஸ்ரீ. உப. தேசிகவரதாசார்யர் 193
கடிதம்:—பகவத்விஷயத்தில் சிலசர்ச்சைகள்...ஸ்ரீ. உப. கே. ராஜகோபாலா
சார்யர் பி-ஏ. பி-எல். 124
கடிதம்:— 2 ஸ்ரீ. உப. இரங்கநாதாசார்யர் 296
கடிதம்:— 3 ஸ்ரீ. உப. ஸ்ரீசைலதாதாசார்யர் 301
கயாமாஹாத்ம்யம்:—கோமடம் ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸ அய்யங்கார் 15
சிலசர்ச்சைகளின் ஸமாதானம்:—ஸ்ரீ. உப. கே. ராஜகோபாலாசார்யர் பி-ஏ, பி-எல் 168
ஜாதியும் மதமும்:—ஸ்ரீ. உப. ஸ்ரீசைல தாதாசார்யர் 17
ஜீவாத்மா தேஹமாயும் பரமாத்மா அந்தர்யாமியாக இருக்கும் தத்வமும் அதன்
ப்ரயோஜனங்களும்:—கொடைவாசல் வித்யாரத்நாகர ஸ்ரீ. உப. நர
ஸிம்ஹமாசார்யர் 274
தாஜகம்:—ஸ்ரீ. உப. ஸ்ரீசைல தாதாசார்யர் 215
திருவாய்மொழியின் பெருமை:—ஸ்ரீ. உப. கே. ராஜகோபாலாசார்யர் பி-ஏ. பி-எல் 66
ப்ரபத்தி:—ஸ்ரீ. உப. ஸ்ரீசைல தாதாசார்யர் 61
ப்ராணாயாமம்:—ஸ்ரீ. உப. வே. க்ருஷ்ணமாசார்யர் 69, 78
பத்ராதிபரின் குறிப்புகள்:—
ஆதி ஸ்ரீசங்கராசார்யரின் ஜீவன சரிதம் 289
ஓர் சிலா சாஸனம் 212
ச்ராத்தம் 49
சைதன்யரும் அவர்மதமும் 259





தக்ஷிணையும் வெள்ளிநாணயமும் 283
தாக்கம் 184
தேவாலய பரிஷ்காரம் 105
நமது ஸமூஹத்தின் துஸ்திதி 129
மந்த்ரங்களின் மஹிமை 2
வ்யூஹாவதாரம் 209
விஷ்ணு ஆலயங்களின் புராதநத்வம் 158
வைகாநஸர்களின் உத்பத்தி 177
ஸ்ரீவேதாந்ததேசிக ஸித்தாந்த ஸம்வர்த்தினி ஸபா ஸ்ரீரங்கம்:— 288
ஸ்தான மாஹாத்ம்யம் 78
ஸ்வப்நம் 288
ஸம்மதி வயதை நிர்ணயிக்கும் மசோதா 156
ஹிந்துக்களின் ஸர்வபூத ஆநுகூல்யம் 25
பழைய பெரியோர்கள்:—ஸ்ரீ. உப. ஸ்ரீசைல தாதாசார்யர் 182
பாகவத ஸ்வரூபமும் வைபவமும்:—வேளுக்குடி ஸ்ரீ. உப. சேஷாத்ரி ஆசார்யர் 40
பாஞ்சராத்ர ப்ராமாண்யம்:—இஞ்ஜிமேடு:—ஸ்ரீ.உப. ரங்கநாதாசார்யர் 220
புஸ்தகவிமர்சம்:—
அடைக்கலப்பத்து—பத்ராதிபர் 152
ப்ரபந்தஸாரம்:—பத்ராதிபர் 152
ஸ்ரீபாஷ்யம் ச்ருதப்ரகாசிகா ஸஹிதம்:—பத்ராதிபர் 127
போக்த்ராபத்யதிகரணம்:—ஸ்ரீ. உப. வே. பண்டித பூஷணம் சே. நரஸிம்ஹ
மாசார்யர் 249
போக்த்ராபத்யதிகரண விமர்சம்:—மஹாமஹோபாத்யாய பண்டிதரத்னம்:—
ஸ்ரீ. உப. ல. ஸ்ரீநிவாஸாசார்யர் 294
மதம் என்பது யாது:— ஸ்ரீ. உப. ஸ்ரீசைலதாதாசார்யர் 174
முதலாழ்வார்கள்:—ஸ்ரீ. உப. கோமடம் ஸ்ரீநிவாஸ அய்யங்கார் 31,53
மோக்ஷஸ்வரூபம்:—ஸ்ரீ. உப. கே. ராஜகோபாலாசார்யர் பி-ஏ. பி-எல். 213
யக்ஷப்ரச்னம்:—ஸ்ரீ. உப. த. கி. ஸ்ரீநிவாஸாசார்யர். 288
வநபோஜன மஹோத்ஸவம்:—ஓர் தேசிகபக்தன் 188
விஜ்ஞாபனம்:—கார்யதர்சி 1
வைராக்யம் ஆவச்யகம்:—காடந்தேத்தி ஸ்ரீ. உப. கோபாலாசார்யர் 265
ஸ்ரீசாரீரக சாஸ்த்ரார்த்த ஸங்க்ரஹம் :—காடந்தேத்திஸ்ரீ. உப. கோபாலாசார்யர் 247,264
ஸ்ரீதேசிகாபிமான விசேஷம்—பண்டிதபூஷணம் ஸ்ரீ. உப. வே. சே. நரஸி
ம்ஹமாசார்யர் 22, 33
ஸ்ரீபாஷ்யகாரரின் திருநக்ஷத்ரம்:—பத்ராதிபர் 198
ஸ்ரீராமாவதார காரணம்:—ஸ்ரீ. உப. தி. ஈ. திருமலாசார்யர் 196
ஸ்ரீருக்மிணீ ப்ராட்டியின் லிகிதம்:—ஸ்ரீ. உப. தி. ராமஸ்வாமி அய்யங்கார்
பி-ஏ. பி-எல். 241
ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் 14-வருஷத்திய அறிக்கை

ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் 14-வது வார்ஷிக மஹாஸங்கத்தின் நிகழ்ச்சி க்ரமங்கள்

ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் 14-வது வார்ஷிக மஹாஸங்கத்தின் ஸத்கார ஸபையின் ஸ்வாகத நிவேதன பத்ரிகை:—ஸ்ரீ. உப. வி. பாஷ்யமய்யங்கார் பி-ஏ. பி-எல். 94

ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் 14-வது வார்ஷிக மஹாஸங்கத்தின் அக்ராஸனாதிபதியின் உபந்யாஸம்:—ஸ்ரீ. உப. வ. வே. ஸ்ரீநிவாஸ அய்யங்கார் பி-எ. பி.எல். 81

ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் 14-வது வார்ஷிக மாஹாஸங்கம்—பத்ராதிபர் 112

ஸத்யவித்யா:—ஸ்ரீ. உப. கெ. டி. துரைஸ்வாமி அய்யங்கார் 157

ஸதாசார்யனை அடைந்த ஸத்சிஷ்யன்:—ஸ்ரீ. உப. ஈ. ரகுநாதாசார்யர் பி-ஏ. 58

ஸந்தேஹத்தின்மேல் ஸந்தேஹம்:—ஸ்ரீ. உப. ஸ்ரீசைலதாதாசார்யர் 302

ஸந்தேஹ த்வய நிவ்ருத்தி:— ஸ்ரீ. உப. வே. சே. நரஸிம்மாசார்யர் 308

ஹயக்ரீவாவதாரம்:—பத்ராதிபர் 9

ஹிந்து மதஸ்தாபன மசோதா:—பத்ராதிபர் 100

பரமபத ஸோபானம்:—வ்யாக்யானத்துடன்:—பண்டிதபூஷணம் ஸ்ரீ. உப. வே. சே. நரஸிம்மாசார்யர்.

மதப்ரஷ்ட ப்ராயச்சித்தம்:—ஸ்ரீ. உப. வாஜபேயம்வீரராகவ தாதாசார்யர்.

ஸ்ரீஸச்சரித்ர ரக்ஷை—(தமிழ் மொழிபெயர்ப்புடன்):—பண்டிதபூஷணம். ஸ்ரீ. உப. வே. சே. நரஸிம்மாசார்யர்.


186753